வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk

மலர் : 03 | 02.01.2023 திங்கட்கிழமை | இதழ் : 23 | பக்கங்கள் : 16




# தமிழரின் ஒற்றுமை முயற்சியை தமிழரசின் செயற்குழு குழப்பாது

## தலைவர் மாவை சேனாதிராசா உறுதி

யாழ்ப்பாணம், ஜனவரி 02

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பிற கட்சிகள் இணைப்பதை பற்றி இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மத்தியசெயற்குழுவில் தீர்மானிக்கப்படவில்லை என்பதை இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெளிவுபடுத்தியுள் 15 ளார்.



# புத்தாண்டு தினத்தில் இளைஞர் படுகொலை!

## கிளிநொச்சியில் துயரம்

கிளிநொச்சி, ஜன. 02

அதிகாலைவேளை வீட்டுக்குள் புகுந்த சிலர் இளைஞர் ஒருவரை கத்தியால் குத்தியதுடன் பலமாக தாக்கியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

புத்தாண்டு தினமான நேற்று அதிகாலை 4 மணியளவில் கிளிநொச்சி - விநாயகபுரத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், தவக்குமார் சுரேஷ் (வயது 26) என்பவரே உயிரிழந்தார்.

இந்த சம்பவத்தில் படுகாயமடைந்தவரை அயலவர் கள் மற்றும் உறவினர்கள் மீட்டு கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டு 15

# ஆணைக்குழு நியமனங்கள் காலவரையின்றி முடக்கம்!

கொழும்பு, ஜன.02

அரசமைப்புச் சபையில் நால்வர் நியமிக்கப்படாமையால் அரசமைப்பு சபை மற்றும் சுயாதீன ஆணைக்குழுவின் நியமனங்கள் கால வரையறை இன்றி முடங்கியுள்ளன என்று கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசமைப்பு பேரவை நியமனம் தொடர்பில் கட்சித் தலைவர்கள் இணக்கப்பாட்டுக்கு வராததன் காரணமாக புதிய சுயாதீன ஆணைக் குழுக்களின் நியமனம் குழப்பமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரசமைப்புச் சபையின் பத்து உறுப்பினர்களில் நான்கு பேரை நியமிப்பது தொடர்பில் கட்சித் தலைவர்களுக்கு 15

# 2022இல் 240 மில்லியன் டொலர் உதவியை வழங்கிய அமெரிக்கா

## தூதுவர் ஜூலி சங் தகவல்

கொழும்பு, ஜன.02

2022 ஆம் ஆண்டில் மட்டும் இலங்கைக்கு 240 மில்லியன் டொலருக்கும் அதிகமான உதவிகளை அமெரிக்கா அறிவித்துள்ளதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்தார்.

இவ்வாறு வழங்கப்பட்ட உதவியால், அடிப்படை உணவுப் பாதுகாப்பு, மாணவர்களுக்கான மதிய உணவு, விவசாயிகளுக்கு உரம் போன்றவற்றுக்கு உதவியாக இருந்துள்ளது என குறிப்பிட்டார்.

மேலும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு பண உதவி உள்ளிட்ட மிகவும் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களின் தேவைகளை நிவர்த்திக்கக் கூடியதாக 15

# கடலில் நீராடச் சென்ற 2 சிறுவர்கள் உயிரிழப்பு

## மாத்தறைப் பகுதியில் துயரம்

கொழும்பு, ஜன.02

மாத்தறை கடலில் நீராடச் சென்ற இரண்டு சிறுவர்கள் கடல் அலையில் சிக்கி உயிரிழந்துள்ளனர் என மாத்தறை பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தறை அக்குரஸ்ஸ பிரதேசத்தை சேர்ந்த 17 வயதுடைய இரண்டு சிறுவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

நான்கு பேர் நீராடச் சென்றதாகவும் அதில் இருவரே உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் தங்கள் வீடுகளில் இருந்து மேலதிக வகுப்புகளில் கலந்து கொள்வதாக கூறி சென்றுள்ளதாக பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில் தகவல் வெளியாகியுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மாத்தறை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)



2023 புதுவருடத்தை வரவேற்று நேற்று நள்ளிரவு யாழ்ப்பாணம் மணிக்கூட்டு கோபுர பகுதியில் டான் தொலைக்காட்சி குழுமத்தின் ஏற்பாட்டில் வாண வேடிக்கை நடைபெற்றபோது...! (படம் - லி. ஜெகன்)

# புத்தாண்டு விபத்துக்களில் 50 பேர் காயம்

கொழும்பு, ஜன. 02

2023 புத்தாண்டின் ஆரம்பத்துடன் இடம்பெற்ற பல்வேறு விபத்துக்களால் கிட்டத்தட்ட 50 பேர் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் தற்போது வரை இந்த விபத்துக்கள் பதிவாகியுள்ளதாக வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

மேலும் பட்டாசு வெடித்ததால் ஏற்பட்ட விபத்துகளில் சிக்கி 4 பேர் 15

# மின்சாரக் கட்டண உயர்வுக்கான எந்த தீர்மானத்தையும் ஏற்கோம்!

## பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தலைவர்

கொழும்பு, ஜன. 02

மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் அமைச்சரவையில் முன்வைக்கப்படும் எந்தவொரு யோசனையையும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு பரிசீலிக்காது எனவும், சட்டத்தை தவறாகப் புரிந்து கொண்டு 'பொதுக் கொள்கைத் திட்டங்களின்' கீழ் இந்த அதிகரிப்பை கொண்டு வந்து பிரேரணையை சமர்ப்பிக்க அமைச்சரவை தயாராகி வருவதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க 15

# அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வைக் காண்பதுதான் என் இலக்கு

## ஜனாதிபதி ரணில் கூறுகின்றார்

கொழும்பு, ஜன. 02

"நாட்டு மக்களில் எந்தவொரு தரப்புக்கும் பாதகம் இல்லாத வகையில் அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு நிரந்தர அரசியல் தீர்வைக் காண்பதுதான் எனது இலக்கு. தீர்வைக் காண்பதற்கான பேச்சுப் பயணம் இந்தப் புத்தாண்டில் வெற்றிகரமாக நடைபெறும் என்று நம்புகின்றேன். தீர்வு காணும் விடயத்தில் இயலாத்தன்மை வருமாயின் அதை எதிர் வரும் சுதந்திர தினத்தில் நாட்டு மக்களுக்கு பகிரங்கமாக 15



உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது…!

அறுபத்து ஒன்பது இலட்சம் மக்களின் அமோக ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த கோட்டாபய ராஜபக்‌ஷவால் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆட்சியில் அமர முடியவில்லை.

பல 'சாதனைகளை' நிகழ்த்திவிட்டு அவர் பதவியிலிருந்து போய்விட்டார். ஆனால், அவரை அவ்வாறு பதவியிலிருந்து விரட்டியதில் எரிபொருளுக்கான வரிசைக்குத்தான் முக்கிய பங்கு உண்டு.

ஆனால், இப்போது அதேபோன்ற ஒரு வரிசை யுகம் மீண்டும் உருவாகும் என்று இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றதாம்.

இன்றைய சூழ்நிலையில் தேர்தல் ஒன்று நடத்தப்பட்டால் மீண்டும் ஓர் எரிபொருள் நெருக்கடி ஏற்படும் என்றே எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றதாம்.

இந்த எச்சரிக்கையை விடுத்தவர்கள் வேறு யாரும் அல்ல, நாட்டின் பொருளாதாரத்தையே கட்டிக்காக்கின்ற மத்திய வங்கியின் அதிகாரிகள்தான் என்கின்றன விசயமறிந்த வட்டாரங்கள்.

உள்ளூராட்சி தேர்தலை நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை தேர்தல்கள் ஆணைக்குழு மேற்கொண்டு வருகின்ற அதேவேளை, மத்திய வங்கி அதிகாரிகளும் நிதி அமைச்சக அதிகாரிகளும் மாறிமாறி ஜனாதிபதியைச் சந்தித்து வருகின்றனர்.

கோட்டாபய அரசாங்கத்தின் காலத்தில் இருந்து ரணில் பிரதமராகவும் ஜனாதிபதியாகவும் பதவியேற்கும் வரை நாட்டின் பொருளாதாரத்தை நிதியமைச்சு கட்டுப்படுத்தியது. அன்றாட செலவுகளுக்குக்கூட கருவூலத்தில் கையிருப்பு இல்லாத நிலைக்கு முன்னாள் அமைச்சின் அதிகாரிகள் நாட்டை இக்கட்டுக்கு தள்ளிவிட்டுச் சென்றனர் என்பதை இங்கு குறிப்பிட வேண்டியதில்லை.

இவ்வாறான சூழ்நிலையில், நிதியமைச்சின் அதிகாரி ஒருவர் அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்து, 'ஐயா, தேர்தலை நடத்த இது சரியான தருணம் அல்ல' என்று கூறியிருக்கிறார்.

நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடி நிலையில், ஜனாதிபதியை நிதி அமைச்சின் அதிகாரிகளும் மத்திய வங்கியின் அதிகாரிகளும் அடிக்கடி சந்தித்து, தத்தமது ஆலோசனைகள், கருத்துக்களை தெரிவித்து வருவது வழமையானதுதான்.

அவ்வாறு சந்தித்த நிதிஅமைச்சின் அதிகாரி ஒருவரே தேர்தலை இப்போது நடத்துவது சரியானது அல்ல என்று கூறியிருக்கிறார்.

அந்த அதிகாரியின் கருத்தைப் போலவே பின்னர் ஒரு தடவை அவரைச் சந்தித்த மத்திய வங்கி அதிகாரி ஒருவரும், இதேபோன்ற எச்சரிக்கையை விடுத்திருக்கிறாராம்.

'சில வருடங்களுக்குப் பின்னர் நாட்டில் பெரிய உற்பத்தி கிடைக்கவிருக்கின்றது. விவசாயிகளுக்கு தாராளமாக வழங்கப்பட்ட இரசாயன உரங்களின் விநியோகம், மற்றும் பிற உதவிகளால் தாராளமான உற்பத்தியில் மக்கள் ஈடுபட்டிருக்கின்றனர். அதனால் தாராள உற்பத்தி கிடைக்கவிருக்கின்றது. அதனை வாங்க அதிக பணம் செலவழிக்க வேண்டும். உணவு பாதுகாப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஏழைகளுக்கு உணவு வழங்கும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்த நேரத்தில் தேர்தலுக்குப் பணம் கொடுத்தால் இதற்குப் பணம் இருக்காது.'

இதுதான் மத்திய வங்கி அதிகாரியின் ஆலோசனை.

அந்த அதிகாரியிடம், ஜனாதிபதி ரணில், 'வரவு-செலவுத் திட்டத்தில் தேர்தல் ஆணையத்துக்கு பத்தாயிரம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அது தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட பணம் இல்லையா?' என்று கேள்வி எழுப்பியிருக்கிறார்.

'ஒவ்வோர் ஆண்டும் புள்ளி விபரங்களில், அவர்கள் கேட்கும் பணத்தை ஒதுக்குகின்றனர். ஆனால், நிலைமை முன்பு போல் இல்லை. அப்போது, கையிருப்பில் 4-5 பில்லியன் டொலர்கள் இருந்தன. ஆனால், தற்போது இல்லை. வாக்களிக்க அதிக பணம் செலவழிக்கப்பட்டால், மீண்டும் எரிவாயு வரிசைகள் மற்றும் எரிபொருள் வரிசைகள் ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே, தேர்தலை ஒத்திவைக்க பரிந்துரைக்கிறோம்' என்றிருக்கிறார்கள் அந்த அதிகாரிகள்.

அதிகாரிகளின் இந்த ஆலோசனை எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்திருக்கிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

ஜனாதிபதி ரணில் மிகவும் அனுபவமிக்க அரசியல்வாதி என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. அவர் 'தந்திர நரி' என்று அழைக்கப்படும் ஜே. ஆரின் மருமகன் என்பதும் எல்லோருக்கும் தெரியும்.

இந்த சந்திப்புக்களில் அனைத்து அதிகாரிகளிடமும் ஆலோசனைகளை கேட்டுக்கொண்டிருந்தாரே தவிர, தேர்தல் நடத்தப்படுமா இல்லையா என்பது பற்றி அவர் வாய்திறக்கவில்லை. வழக்கம்போல மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்த அவர் என்ன நினைக்கிறார் என்பதை அதிகாரிகளும் புரிந்துகொண்டிருப்பார்களோ தெரியவில்லை.

- ஊர்க்குருவி

# மன்னார் மறை மாவட்டத்தில் புதுவருட நள்ளிரவு ஆராதனை!




மன்னார், ஜன. 02

மன்னார் மறை மாவட்டத்தில் புத்தாண்டு நள்ளிரவு திருவிழா திருப்பலி மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு 11.45 மணிக்கு கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

மேலும் மாவட்டத்தில் உள்ள பல ஆலயங்களிலும் நள்ளிரவு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

திருப்பலியின் போது ஆலயத்திற்கு பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் விசேட பாதுகாப்பை வழங்கியுள்ளனர்.

இதன் போது பல ஆயிரக்கணக்கான மக்கள் புத்தாண்டு நள்ளிரவு திருப்பலியில் கலந்து கொண்டிருந்தனர்.

புத்தாண்டு நள்ளிரவு திருப்பலியின் போது மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தனது உரையில் தெரிவிக்கையில்,

இந்த புதிய ஆண்டிலே நீங்கள் எத்தனையோ சிந்தனைகளோடு புது திட்டங்களோடு இவ்வாண்டில் நீங்கள் சென்ற வருடம் அகப்பட்டிருந்த துன்பங்களிலிருந்து விடுபட்டு எமது நாட்டிலே பொருளாதார நிலை மாறி மக்கள் ஒரு நெருக்கடியான நிலையில் வாழாமல் விடுதலை பெற்று ஒரு சாதாரண ஆண்டாக இந்த வருடம் உங்களுக்கு இருக்க வேண்டும் என்று ஆசிக்கின்றேன்.

சென்ற ஆண்டிலே பல வேறு பிரச்னைகளால் நாங்கள் துன்பப்பட்டோம். இனப் பிரச்னைகள், மொழிப் பிரச்னைகள் என மக்களை பல விதத்திலும் தாக்கிக் கொண்டிருந்தது.

அரசியலிலும், பொருளாதாரத்திலும் பெரிய நெருக்கடிகள் இருந்து வந்தது. புத்தாண்டிலே உங்களுக்கு ஒரு விடுதலை கிடைக்கப்பெற்று நீங்கள் சுபீட்சமாக வாழவும் இறை ஆசீர் நிரம்ப கிடைக்கப் பெற்று மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் வாழ்ந்திட இறைவன் உங்களுக்கு அருள வேண்டும் - என்றார். (ஐ)

# முன்னாள் எம். பி. மகேஸ்வரனின் 15ஆவது ஆண்டு நினைவேந்தல்!

யாழ்ப்பாணம், ஜன. 02

கொழும்பில் வைத்து சுட்டு படுகொலை செய்யப்பட்ட, ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரனின் 15ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று வட்டுக்கோட்டை ஐக்கிய தேசியக் கட்சியின் அலுவலகத்தில் நடைபெற்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதி அமைப்பாளர் விஜிமருதன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வானது பூஜை வழிபாட்டுடன் ஆரம்பமானது. திருவுருவ படத்துக்கு மலர்




மாலை அணிவித்து மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் வட்டுக் கோட்டை ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர் விஜிமருதன், மதகுருமார், கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

# ஒரு கோடி தாவரங்கள் நடுகை திட்டம் ஆரம்பம்!



யாழ்ப்பாணம், ஜன. 02

இலங்கை முதலுதவிச் சங்கம் மற்றும் இந்து சமய தொண்டர் சபையினரால் ஒரு கோடி தாவரங்கள் நடுகை செய்யும் நிகழ்வு கைதடி கற்பக விநாயகர் ஆலய வளாகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 11:30 மணியளவில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை முதலுதவி சங்க தேசிய ஆணையாளர் வை. மோகனதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதல் நிகழ்வாக ஆலயத்தில் சிறப்பு பூசை நடந்தது. தொடர்ந்து ஒரு கோடி தாவரங்கள் நடுகை திட்டம் சம்பிர தாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

ஆசி உரையை சிவசிறீ குமார சுவாமி நாதக் குருக்கள், இலங்கை முதலுதவி சங்க நிர்வாக திட்டமிடல் பிரிவு ஆலோசகரும் சமூக செயல்பாட்டாளருமான அன்பரசன், சமூக செயல்பாட்டாளர் ஜெயராசசிங்கம், இலங்கை முதலுதவி சங்க மகளீர் அணி பொறுப்பாசிரியர் த. கேதீஸ்வரி, இலங்கை முதலுதவிச் சங்கம், இந்துசமய தொண்டர்சபை கண்காணிப்பாளர் வை.ஜெகதாஸ், கைதடி கற்பக விநாயகர் ஆலய தர்மகத்தா, நிதிப்பங்காளியான முன்னாள் இலங்கை முதலுதவி சங்க உறுப்பினரும், சமூக செயல்பாட்டாளருமான விஜயனின் குடும்பத்தினர், சாவகச்சேரி பிரதேச செயலக உதவி திட்ட பணிப்பாளர் இ. சர்வேந்திரன், இலங்கை முதலுதவி சங்க தொண்டர்கள், கண்காணிப்பாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(ஐ-02)

Eelanadu ஈழநாடு
02.01.2023 திங்கட்கிழமை
பிலவ வருடம், மார்கழி 17

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# அனைவரையும் எவ்வாறு திருப்திப்படுத்துவது?

ரணில் விக்கிரமசிங்க அனைவரையும் திருப்திப்படுத்தக்கூடியதோர் அரசியல் தீர்வை இந்த ஆண்டில் காணப்போவதாகக் கூறுகின்றார். அதாவது தமிழரையும் திருப்திப்படுத்த வேண்டும் – முஸ்லிம்களையும் திருப்திப்படுத்த வேண்டும் – சிங்களவர்களையும் திருப்திப்படுத்த வேண்டும் – பௌத்த மகாசங்கத்தினரையும் திருப்திப்படுத்த வேண்டும். அத்துடன் தென்னிலங்கையிலுள்ள சிங்கள அடிப்படைவாதிகளையும் திருப்திப்படுத்த வேண்டும். இது எவ்வாறு சாத்தியப்படும்?

இலங்கையின் அரசியல் வரலாற்றில் இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட அரசியல் தீர்வுக்கான அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்திருக்கின்றன. தென்னிலங்கையின் சிங்கள தரப்புக்களின் எதிர்ப்புகளுக்கு மத்தியில்தான் அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்திருக்கின்றன. இவ்வாறானதொரு நிலையில், பொருளாதார நெருக்கடியினால் அதிகாரத்துக்கு வரநேர்ந்த ரணில் விக்கிரமசிங்க, அனைத்து தரப்புக்களையும் திருப்திப்படுத்தப் போவதாகக் கூறுவது விசித்திரமான ஒன்றாகவே இருக்கின்றது.

நீண்டகால அரசியல் கோரிக்கைகளின் அடிப்படையில் தமிழ் மக்களை திருப்திப்படுத்துவதாயின் வடக்கு – கிழக்கு இணைந்த சமஷ்டி அடிப்படையிலான அரசியல் ஏற்பாடொன்றை வழங்குவதற்கு ரணில் முன்வர வேண்டும். இது ஒன்றுதான் தமிழ் மக்களை திருப்திப்படுத்தக்கூடியது. ஆனால், இதனை முஸ்லிம்களும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை – சிங்களவர்களும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை – பௌத்த மகாசங்கங்களும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. சிங்கள அடிப்படைவாத தரப்புக்கள் – தங்களை ஒருங்கிணைப்பதில் பலவீனமாக இருந்தாலும்கூட, நிச்சயம் தங்களின் எதிர்ப்பை வெளிப்படுத்துவர். ஒருவேளை ரணில் விக்கிரமசிங்க தேர்தல் ஆர்வம் இல்லாதவராக இருந்தால், துணிவாக சில விடயங்களை முன்னெடுக்க முடியும். ஆனால், அவ்வாறு தெரியவில்லை. இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மக்களால் தெரிவுசெய்யப்பட்டதொரு ஜனாதிபதியாக வந்துவிட வேண்டுமென்னும், தனது நீண்டகால அரசியல் கனவை எப்படியாவது பூர்த்திசெய்துவிட வேண்டுமென்னும் முனைப்பு அவரிடம் இருக்கின்றது. அவ்வாறானதோர் இலக்குடனேயே ரணில் ஒவ்வொன்றையும் திட்டமிடுகிறாரென்றே தெரிகின்றது. இந்த நிலையில், தமிழ் மக்களையும் ஏனையவர்களையும் அரசியல் தீர்வு விடயத்தில் திருப்திப்படுத்தலாமென்பது நடைமுறைக்கு சாத்தியமான ஒன்றாக இல்லை.

தென்னிலங்கையின் பேச்சுகள் ஒவ்வொன்றின் இறுதி விளைவும் தமிழர்களுக்கு எதிராகவே இருந்திருக்கின்றது. அரசியலமைப்பிலுள்ள 13ஆவது திருத்தத்திலுள்ள காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைக்கூட அமுல்படுத்துவதில் தென்னிலங்கை தரப்புக்கள் மத்தியில் இன்னும் உடன்பாடு ஏற்படவில்லை. இந்த நிலையில் 13இலுள்ள விடயங்களிலேயே அனைவரையும் திருப்திப்படுத்துவது என்பதே மிகவும் சிக்கலாகத் தெரிகின்றது. இந்த நிலையில் 13இற்கு அப்பால் செல்வதில் எவ்வாறு அனைவரையும் திருப்திப்படுத்திக் கொண்டு முன்நகர்வது? அரசியல் தீர்வுக்கான நகர்வில் ரணில் உண்மையாக இருப்பது உண்மையாயின் சில தரப்புக்களை பகைத்துத்தான் ஓர் உறுதியான தீர்வை காணமுடியும்.

இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெளிவாகவும் உறுதியாகவும் இருக்க வேண்டும். ஏனெனில், இறுதியில் அனைவரையும் திருப்திப்படுத்தும் முயற்சியில் மீளவும் தமிழ் மக்களுக்கே நாமம் போடப்பட்டுவிடலாம். எனவே, கூட்டமைப்பு ஒன்றில் உறுதியாக இருக்க வேண்டும். அதாவது, இறுதியான அரசியல் தீர்வு பற்றி இப்போது பேச முடியாது. அதற்கு முன்பதாக அரசியலமைப்பில் இருப்பதை நடைமுறைப்படுத்துங்கள். அதன் பின்னர் அடுத்த கட்டத்தை பார்ப்போம். இந்த விடயத்தின் மீதான உறுதியை கூட்டமைப்பு தளரவிடுமானால், மீண்டும் ஏமாற்றமே கிட்டும்.

# திருவெம்பாவை விரதத்தை முன்னிட்டு சைவ மகா சபையினர் பாத யாத்திரை!



*யாழ்ப்பாணம், ஜன. 02*

திருவெம்பாவை விரதத்தை முன்னிட்டு அகில இலங்கை சைவ மகா சபையினரால் வருடாவருடம் முன்னெடுக்கப்படும் பாத யாத்திரை நேற்று நடைபெற்றது.

மாதகல் சம்பில்துறை சம்புநாத ஈஸ்வரத்திலிருந்து காரைநகர் ஈழத்து சிதம்பரத்தை நோக்கி 10ஆவது வருடமாக இந்தப் பாத யாத்திரை நடைபெற்றது.

நந்தி கொடியுடன் அடியவர்கள் சிவனுடைய நாமங்களை உச்சரித்தும் பாராயணம் செய்தும், ஆன்மீக கீர்த்தனைகளை பாடிய வண்ணம் பாத யாத்திரையில் ஈடுபட்டனர்.

சாந்தை சிதம்பரேஸ்வரர் ஆலயம், சாந்தை வீரபத்திரர் ஆலயம், பனிப்புலம் முத்து மாரியம்மன் ஆலயம், சுழிபுரம் பறாளாய் பிள்ளையார் முருகன் ஆலயங்கள், சுழிபுரம் மத்தி கறுத்தனாத்தோட்டம் துர்க்கையம்மன் ஆலயம், சுழிபுரம் மேற்கு ஹரிகர புத்திர ஐயனார் ஆலயம், சுழிபுரம் மேற்கு கதிர்வேலாயத சுவாமிகள் ஆலயம், சுழிபுரம் பெரிய புலோ வைரவர் ஆலயம், மூளாய் வதிரன்புலோ பிள்ளையார் முருகன் ஆலயங்கள்,மூளாய் இராவணேசுவரர் ஆலயத்தினை தரிசித்து பொன்னாலை நாராயணன் தாகசாந்தி நிலையத்தினரின் அன்னதானத்தை தொடர்ந்து வலந்தலை மடத்துக்கரை முத்துமாரியம்மன் ஆலயம் முதலான திருத்தலங்களை தரிசித்தவாறு காரைநகர் ஈழத்து சிதம்பரத்தை சென்றடைந்து நிறைவுபெற்றது.

வடக்கு - கிழக்கு, மலையகம் என நாடளாவியரீதியில் குறித்த பாதயாத்திரையில் அதிகளவான சிவனடியார்கள் கலந்துகொண்ட நிலையில் அறநெறி கல்வியை மாணவர்களுக்கு ஊக்குவித்தல், திசைமாறி செல்லும் இளைஞர்களை வெளிப்படுத்துவதையும் இவ்வருடம் பிரதான நோக்கமாக கொண்டு ஏழைப்பங்காளனை காணவாரீர் எனும் தொனிப்பொருளில் குறித்த பாதயாத்திரை முன்னெடுக்கப்பட்டது. (ஐ)

# மின் கட்டண உயர்வு பத்திரம் இன்று அமைச்சரவைக்கு!

*கொழும்பு, ஜன. 02*

தொழில்துறைக்கான பொதுவான கொள்கை வழிகாட்டுதல்களை வகுக்க மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சருக்கு சட்டம் முழு அதிகாரம் அளித்துள்ளது என்று சட்டமா அதிபர் விளக்கமளித்துள்ளதை அடுத்து, எதிர்ப்புக்களை பொருட்படுத்தாமல் 65 சதவீத கட்டண உயர்வை அரசாங்கம் நிறைவேற்றவுள்ளது.

இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு சட்டமானது, பொதுப் பயன்பாட்டுத் துறைக்கு பொறுப்பான அமைச்சருடன் கலந்தாலோசித்து, தனக்குத் தேவையான இடத்தில், பொதுவான கொள்கை வழி காட்டுதல்களை வகுத்து, அத்தகைய வழிகாட்டுதல்களை அமைச்சர் மூலம் வெளியிடுவதற்கு அமைச்சரவைக்கு அதிகாரம் வழங்குவ தாகவும் சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம் கூறியுள்ளார்.

அத்தகைய வழிகாட்டுதல்களை நடைமுறைப்படுத்த பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு கடமைப்பட்டுள்ளது, என்று சட்டமா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கான பிரேரணை மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகரவினால் இன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

உத்தேச கட்டண உயர்வின் கீழ் யூனிட் மற்றும் நிலையான கட்டணங்கள் இரண்டும் கணிசமாக உயரும்.

0-30 அலகுகளுக்கு இடையில் ரூ. 8 முதல் ரூ. 30, 31-60 அலகுகளுக்கு இடையில் ரூ. 10 முதல் ரூ. 37, 61-91 அலகுகளுக்கு இடையில் ரூ. 16 முதல் ரூ. 42 வரை அதிகரிக்கும். 91 அலகுகளுக்கு மேல் உள்ள வகைகளில் நுகர்வோருக்கு அதிகரிப்பு இருக்காது.

நிலையான கட்டணங்களும் கணிசமாக அதிகரிக்கிறது. 0-30 அலகுகளுக்கு பாவனையாளர்களின் நிலையான கட்டணங்கள் ரூ. 120 முதல் ரூ. 400, 31-60 அலகுகள் பாவனையாளர்களின் நிலையான கட்டணங்கள் ரூ. 240 முதல் ரூ. 550 , 61-91 அலகு பாவனையாளர்களின் நிலையான கட்டணம் ரூ. 360 முதல் ரூ. 650., 91-120 அலகு, மற்றும் 120-180 அலகு பாவனையாளர்களின் நிலையான கட்டணங்கள் ரூ. 960 முதல் ரூ. 1500. 181 அலகுகளுக்கு மேல் பயன்படுத்தும் நுகர்வோர் நிலையான கட்டணங்கள் ரூ. 1500 முதல் ரூ. 2000 வரை அதிகரிக்கும்.

கடந்த ஓகஸ்டில் மின் கட்டண உயர்வு செய்யப்பட்டு நான்கு மாதங்கள் மட்டுமே ஆகியுள்ள போதிலும், மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சு மற்றொரு கட்டண உயர்வை மேற்கொள்கிறது.

இதனால் பொதுமக்களின் வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்படவுள்ளது. எனினும், இந்த ஆண்டு மின் வெட்டை அமுல்ப்படுத்தாமல் இருப்பதானால் இந்த உயர்வு அவசியம் என்று அமைச்சரவை பத்திரம் கூறுகிறது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஈழநாடு



ஜனவரி - 02 திங்கட்கிழமை
சுபகிருது வருடம் - மார்கழி 18
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : ஏகாதசி




**மேடம்**
கோயிலுக்கு செல்வீர்கள். குடும்ப நலனில் அக்கறை காட்டுவீர்கள். உங்கள் விருப்பம் நிறைவேறும். பெரியவர்கள் ஆதரவால் தேவையான பணம் அதிகரிக்கும்.கொடுக்கல் வாங்கலில் நிதானம் தேவை.

**இடபம்**
பொருளாதார நிலை உயரும். செலவு அதிகரிக்கும். குடும்பத்தினருக்காக நவீன பொருட்கள் வாங்குவீர்கள். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். முயற்சி வெற்றியாகும்.

**மிதுனம்**
மகிழ்ச்சியான நாள். நேற்றைய எண்ணம் ஒன்று இன்று நிறைவேறும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.உங்களை விட்டு விலகிச் சென்ற ஒருவர் மீண்டும் உங்களைத் தேடி வருவார்.

**கடகம்**
வாய்ப்புகளைப் பயன்படுத்தி உங்கள் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் அடைவீர்கள். உங்கள் முயற்சி நிறைவேறும்.

**சிம்மம்**
எதிர்பார்த்த வரவு வந்து சேரும். தடைபட்ட செயல்களில் முன்னேற்றம் காண்பீர். குடும்பத்துடன் கோயிலுக்கு சென்று வருவீர்கள். முயற்சியில் முன்னேற்றம் அடைவீர்கள்.

**கன்னி**
அமைதி காப்பது நல்லது. முயற்சிகளில் தாமதம் உண்டாகும். அடுத்தவர் விஷயங்களில் தலையிட வேண்டாம். குடும்பத்தில் ஒருவரின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**துலாம்**
மகிழ்ச்சி அதிகரிக்கும். குடும்பத்தில் உண்டான சங்கடம் விலகும். உங்கள் முயற்சி வெற்றியாகும். மகிழ்ச்சி கூடும்.இதுவரை இருந்து வந்த தடை விலகும். புதிய முயற்சியில் முன்னேற்றம் உண்டு.

**விருட்சிகம்**
தடையை விலக்குவீர்கள். வரவேண்டிய பணம் வந்து சேரும் நாள். நீங்கள் எதிர்பார்த்த நல்ல செய்தி வரும். மற்றவர்களால் முடிக்க முடியாத ஒரு வேலையை சாதாரணமாக செய்து முடிப்பீர்கள்.

**தனுசு**
குடும்பத்தில் உள்ள ஒருவரின் அடிப்படைத் தேவையை பூர்த்தி செய்வீர்கள். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். சேமிப்பில் உங்கள் கவனம் செல்லும்.மனதில் இருந்து வந்த சங்கடம் விலகும்.

**மகரம்**
பயணத்தால் அலைச்சல் அதிகரித்தாலும் லாபம் உண்டாகும். மகிழ்ச்சியான நாள். வியாபாரத்தில் கவனம் அதிகரிக்கும்.எதிர்பார்த்த ஒருவரை சந்தித்து மகிழ்வீர்கள். உங்கள் கனவு நிறைவேறும்.

**கும்பம்**
தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு உங்கள் செயல்களில் லாபம் காண்பீர்கள். நிதிநிலை உயரும். சகோதரர் உதவியால் ஒரு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். வரவுகள் அதிகரிக்கும்.

**மீனம்**
எதிர்பார்த்த வரவு வந்து சேரும். நீண்டநாள் முயற்சி ஒன்று நிறைவேறும். பழைய பிரச்னை ஒன்று முடிவிற்கு வரும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.கொடுத்த வாக்கை நிறைவேற்றுவீர்கள். தம்பதிகளுக்குள் ஏற்பட்ட பிரச்னை தீரும்.

# கூட்டணிக் கட்சிகள் இல்லாமல் தேர்தலை சந்திக்க தி.மு.க தயாரா?

## பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை

*சென்னை, ஜன. 02*

கூட்டணி வைக்காமல் தேர்தலை சந்திக்க தி. மு. க. தயாரா என்று முதல்வர் மு. க. ஸ்டாலினுக்கு பா. ஜ. க. மாநிலத் தலைவர் கே. அண்ணாமலை கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில்,

1967இல் தி. மு. க. முதல் முறையாக ஆட்சிக்கு வந்தது, அதனுடைய சொந்த பலத்தால் அல்ல. சுதந்திர கட்சி மற்றும் மார்க்சிஸ்ட் கட்சிகளினுடனான கூட்டணியின் காரணமாகத்தான். 2021இல் தி. மு. க. ஆட்சிக்கு வந்ததும் அதன் தனி பலத்தால் அல்ல. 12 கட்சிகளுடன் கூட்டணி வைத்ததால் மட்டும்.



1967இலிருந்து தி. மு. க. ஒரு தேர்தலில் கூட தனித்துப் போட்டியிட்டதில்லை. தங்கள் அரசியல் ஆதாயங்களுக்காக பல கட்சிகளுடன் கூட்டணி சேர்ந்தே போட்டியிட்டிருக்கிறது. இப்படி பல கட்சிகளுடன் கூட்டணி சேர்ந்தும், தி. மு. க. படுமோசமான தோல்வியைச் சந்தித்த தேர்தல்களும் உண்டு.

யதார்த்தத்தை எதிர்கொள்ளுங்கள் மு.க. ஸ்டாலின். துணைப் பிரதமராகும் உங்களின் இலட்சியம் கலைந்து போய் நெடுங்காலம் ஆகி விட்டது.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில், பா. ஜ. க. 2024 ஆம் ஆண்டு தேர்தலிலும் மாபெரும் வெற்றி பெறும். தமிழக பா. ஜ. க. கடந்த காலங்களில் தனித்துப் போட்டியிட்டதுண்டு. இனி வரும் காலங்களில், அதை மீண்டும் செய்யத் தயங்காது.

நான் உங்களுக்கு சவால் விடுகிறேன். கூட்டணி இல்லாமல் போட்டியிட தி. மு. க. தயாரா? - என்றார்.

தமிழகத்தில் பா. ஜ. க. தனித்துப் போட்டியிட்டால் ஒரு தொகுதியில்கூட வெற்றி பெற முடியாது என்று முதல்வர் மு. க. ஸ்டாலின் கூறியிருப்பதற்கு கே. அண்ணாமலை இவ்வாறு கூறியுள்ளார். (ஐ)

# சாதிய, மதவாத சக்திகளுக்கு எப்போதுமே இடமளிக்கக்கூடாது

## தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலின்

*சென்னை, ஜன. 02*

நம்மை பிளவுபடுத்தும் சாதிய, மதவாத சக்திகளுக்கு எப்போதும் இடமளிக்கக் கூடாது என்று முதல்வர் மு. க. ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆங்கிலப் புத்தாண்டை ஒட்டி அவர் வெளியிட்ட செய்தியில்,

கல்வி, வேலைவாய்ப்பு, அறிவுத் திறன், தொழில் வளர்ச்சி, அனைவருக்குமான சமூக வளர்ச்சி ஆகியவற்றில் இந்தியாவின் முன்மாதிரி மாநிலமாக தமிழ்நாடு இருக்க வேண்டும். இதுதான் திராவிட மொடல் ஆட்சியின் இலட்சியம். அந்த இலட்சியத்துக்காகவே என்னை ஒப்படைத்துக் கொண்டு செயல்படுவேன். இதற்குத் தமிழ்நாட்டு மக்கள் மனமார்ந்த ஒத்துழைப்பைத் தர வேண்டும்.

சமூக நீதி மண்ணாக, மதச் சார்பற்ற மாநிலமாக, தமிழ்நாடு விளங்கிட தமிழக



மக்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். நம்மிடையே வெறுப்புணர்வைத் தூண்டி, நம்மைப் பிளவுபடுத்தும் சாதிய, மதவாத சக்திகளுக்கு எப்போதும் இடமளிக்கக் கூடாது. மொழியால், இனத்தால், தமிழர்கள் என உணர்வோடு ஒன்றிணைந்து வாழ வேண்டும். நல்லிணக்க மாநிலமாக இருந்தால்தான் சிறந்த மாநிலமாக முடியும்.

இன்றைய இளைய சமுதாயமானது படிப்பில் மட்டும் கவனம் செலுத்த வேண்டும். உயரிய இலட்சியங்களை அடைய கனவு காண வேண்டும். அந்தக் கனவை நினைவாக்க உழைக்க வேண்டும். அதில் வெற்றி பெற்று, அனைவரும் பெருமை அடைவதோடு, பெற்றோரையும் பெருமைப்படுத்த வேண்டும்.

படிப்பைத் திசை திருப்பும் பழக்க வழக்கங்களுக்கு அடிமையாகி விடக்கூடாது. உடல்நலன், மனநலனுக்கு கேடான போதைப் பழக்கங்களுக்கு இளைய சமுதாயம் அடிமையாகி விடக்கூடாது. இளைய சக்தியின் மூலமாகவே இணையற்ற மாநிலத்தை உருவாக்க முடியும்.

புத்தாண்டு பிறந்துள்ள நிலையில், கடந்த ஆண்டைப் போன்றே வருங்காலமும் வசந்த காலமாக அமையட்டும்- என்றுள்ளது. (ஐ)

# தேர்தல் அதிகாரியின் கடிதத்தை திருப்பி அனுப்பியது அ.தி.மு.க.

*சென்னை, ஜன. 02*

தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி அனுப்பிய கடிதத்தை அ. தி. மு. க. தலைமை அலுவலக நிர்வாகிகள் பெற்றுக்கொள்ள மறுத்து திருப்பி அனுப்பிவிட்டனர்.

மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயர்ந்து வாழ்வோர் வாக்களிப்பதற்காக ரிமோட் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தை இந்திய தேர்தல் ஆணையம் அறிமுகம் செய்யவுள்ளது. இந்த இயந்திரத்தின் செயல்பாடு குறித்து அரசியல் கட்சிகளுக்கு ஜனவரி 16இல் டில்லியில் விளக்கிக் காட்டப்பட உள்ளது. இதற்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு அனுப்பப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்ய பிரத சாகு அங்கீகரிக்கப்பட்ட மாநிலக் கட்சிகளுக்கு அழைப்பிதழ் அனுப்பியுள்ளார். அ. தி. மு. க. கட்சிக்கு அனுப்பிய அழைப்பில், ஒருங்கிணைப்பாளர் என ஓ. பன்னீர்செல்வத்தையும், இணை ஒருங்கிணைப்பாளர் என எடப்பாடி பழனிசாமியையும் குறிப்பிட்டு அழைப்பிதழ் அனுப்பியது.

இந்த நிலையில் அந்த கடிதத்தை அ.தி.மு.க. தலைமை அலுவலக நிர்வாகிகள் பெற்றுக்கொள்ள மறுத்து திருப்பி அனுப்பி விட்டனர்.

தேர்தல் ஆணையம் குறிப்பிட்ட பதவிகளில் யாரும் இல்லை என அவர்கள் இத்தகைய நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இதனிடையே, அ. தி. மு. கவின் இடைக்காலப் பொதுச் செயலர் தொடர்பான வழக்கு உச்சநீதிமன்றத்தில் நடைபெற்று, ஜனவரி 4 இல் தீர்ப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், மத்திய சட்ட ஆணையம் அவ்வாறு குறிப்பிட்டிருந்தது அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

ஈழநாடு



# தேசிய நடனப் போட்டியில் யாழ். இந்து மகளிர் முதலிடம்!



யாழ்ப்பாணம், ஜன. 02

அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட தேசிய நடனப் போட்டியில் யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் சாதனை படைத்துள்ளனர் .

கடந்த புதன்கிழமை அநுராதபுரத்தில் இடம்பெற்ற தேசிய நடனப் போட்டியில் இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த மாணவிகளான லாவண்யா தட்சணாமூர்த்தி தனி ஜதீஸ்வரத்தில் முதலாம் இடத்தையும், நிவேதனா பிரபாகரன் தனி பதம் முதலாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

மேலும், ராகவி கலைதாசன், நிவேதனா பிரபாகரன், யதுர்ஷினி குணநேசன், ருக் ஷிகா இராஜரட்ணம் , சியானா இராஜேந்திரன் , லிதுனா சுரேஸ்குமார், ஷன்ஜா கிருபாகரன் ஆகியோர் பங்குபற்றிய குழு வர்ணம் முதலாம் இடத்தையும் பெற்று சாதித்தது. (ஐ)

# போதை மாத்திரைகளுடன் வவுனியாவில் இருவர் கைது!

வவுனியா, ஜன. 02

வவுனியாவில் போதை மாத்திரையுடன் இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று நெளுக்குளம் பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

வவுனியா நெளுக்குளம் பொலிஸாரின் விசேட சோதனை நடவடிக்கையி லேயே போதை மாத்திரைகளுடன் இளைஞர் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளை அடுத்து குறித்த இளைஞருக்கு போதை மாத்திரைகளை விநியோகம் செய்தவரும் கைது செய்யப்பட்டார்.

இருவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அத்துடன், அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# கப்பலேந்தி மாதா தேவாலயத்தில் புதுவருட திருப்பலி ஒப்புக்கொடுப்பு!

வடமராட்சி, ஜன. 02

வடமராட்சி கிழக்கு - கட்டைக்காடு கப்பலேந்தி மாதா ஆலய வருடத் திருப்பலி நேற்று ஞாயிற்றுக்கிழமை 6.00 அருட்தந்தை அல்பீன் அடிகளார் தலைமையில் நடைபெற்றது.

முழுமையாக கத்தோலிக்க கிராமமாக திகழும் கட்டைக்காட்டு மக்கள் நூற்றுக் கணக்கானோர் குறித்த திருப்பலியில் பங்கெடுத்தனர்.

2022 ஆம் ஆண்டிற்கு மன நிறைவுடன் நன்றி கூறி வழிபட்டு பிறந்திருக்கும் புதிய ஆண்டை பெருமகிழ்வுடன் வரவேற்று வழிபட்டுச் சென்றதையும் காணமுடிந்தது.

திருப்பலி நிறைவு பெற்றதும் அருட்தந்தையால் கடல் ஆசீர்வதிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ-02)

வேலியே பயிரை மேய்ந்தது:

# சிறுமி பாலியல் துஷ்பிரயோகம் இரு பொலிஸார்மீது விசாரணை!

வடமராட்சி, ஜன.02

**பருத்தித்துறை பொலிஸ் பிரிவில் பதின்ம வயது சிறுமியை ஆபாச காணொலியை காட்டி - மிரட்டி கடந்த இரண்டு வருட காலமாக பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திவந்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.**

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் நிவாரணம் தருவதாக 17 வயது சிறுமியை இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் அழைத்துச் சென்று, ஆட்களற்ற வீடொன்றில் வைத்து இருவரும் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினர்.

அத்துடன், அதனை காணொலியாக எடுத்து வைத்து, அதனை காட்டி, கடந்த இரண்டு வருடங்களாக சிறுமியை இரண்டு உத்தியோகத்தர்களும் மிரட்டி, தொடர்ந்து துஷ்பிரயோகம் செய்து வந்துள்ளனர்.

இந்நிலையில் கடந்த வியாழக்கிழமை பாதிக்கப்பட்ட சிறுமி சுகவீனமுற்ற நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு மேற்கொள்ளப்பட்ட மருத்துவ பரிசோதனையின் போது, சிறுமி கடந்த இரண்டு வருடங்களாக பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட விடயம் அறியப்பட்டது.

இதனையடுத்து சிறுமியிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே இவ்விடயம் வெளிவந்துள்ளது.

இதேவேளை குறித்த இரு பொலிஸ் உத்தியோகத்தர்களும், தம்மிடம் இருந்த காணொலியை பாடசாலை சிறுவர்கள் சிலருக்கு காண்பித்துள்ளனர் என்றும் பாதிக்கப்பட்ட சிறுமி வாக்குமூலம் அளித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)



வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் 2023 புதுவருடத்தை தீபமேற்றி வரவேற்ற சமயம்...!

# 3 கட்சிகளே கூட்டமைப்பாக போட்டி; தமிழரசு அரசியல் குழு தீர்மானித்தது!

## வடக்கு மாகாண சபை அவைத்தலைவர்

யாழ்ப்பாணம், ஜன. 02

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 3 கட்சிகள் மட்டுமே இணைந்து போட்டியிடுவதான தீர்மானம் தமிழரசுக் கட்சியின் அரசியல்க் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படமை உண்மைதான் என தமிழரசுக் கட்சியின் சிரேஸ்ட துணைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஒன்று வந்தால் தமிழரசுக் கட்சி மட்டும் தனித்து போட்டியிடுவதா என்ற விடயம் ஆராயப்பட்டபோதே இந்த விடயமும் தீர்மானமாக கூறப்பட்டது.

அதாவது, தமிழ் அரசுக் கட்சி மட்டும் அல்ல தமிழ் அரசுக் கட்சி உட்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் 3 கட்சிகளுடன் மட்டும் கூட்டிணைந்து போட்டியிடுவதாகவே தீர்மானிக்கப்பட்டது.

மெய்நிகர் வழியில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் தலைவர் மாவை சேனாதிராசா, பாராளுமன்ற உறுப்பினர்களான எம். ஏ. சுமந்திரன், சி. சிறீதரன், இ. சாணக்கியன் மற்றும் கட்சியின் பதில் செயலாளர் ப. சத்தியலிங்கம், கொழும்புக் கிளைத் தலைவர் கே. வி. தவராசா, திருகோணமலை மாவட்ட கிளைத் தலைவர் எஸ்.குகதாசன், கட்சியின் நிர்வாகச் செயலாளர் எஸ். எக்ஸ். குலநாயகம் ஆகிய ஒன்பது பேர் பங்குகொண்ட கூட்டத்திலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாறு தீர்மானிக்கப்படவில்லை என்ற ஒரு கருத்து இன்று முன்வைக்கப்பட்டதனால் இக் கருத்தை பகிரங்கமாகக் கூறும் நிலை ஏற்படுகின்றது.

இதன் காரணமாகவே இக் கருத்தை பொது வெளியில் கூற முன்பு கட்சியின் பதில் செயலாளர் மற்றும் நிர்வாகச் செயலாளர் ஆகியோருடன் இதனை கூறுவதற்கான ஒப்புதலையும் பெற்றேன் என்பதை தெளிவுபடுத்த விரும்புகின்றேன் - என தெரிவித்தார். (ஐ)

# வீதி விபத்தை குறைப்பதற்காக அரச குடியிருப்பில் சிரமதானம்!



வவுனியா, ஜன. 02

வவுனியா ஓமந்தை அரச குடியிருப்பு பகுதியில் வீதி விபத்தைக் குறைக்கும் நோக்குடன் சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டது.

ஓமந்தை அரச குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள விளை யாட்டு அரங்கை சூழவுள்ள பற்றைகளால் அடிக்கடி வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன. இதனைத் தவிர்க்கும் நோக்கில் வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுபத் கல கமகேவின் திட்டமிடலில் சீன அரச கூட்டுத்தாபனத்தின் அனுசரணையில் ஓமந்தை பொலிஸாரின் ஒத்துழைப்புடன் சிரமதானப்பணி முன்னெடுக்கப்பட்டது.

அங்கிருந்த பற்றைகள் அகற்றப்பட்டமை மக்கள் மத்தியில் வரவேற்பை பெற்றுள்ளது. (ஐ)







பருத்தித்துறை பிரதேச சபையின் தேசிய வாசிப்பு மாத - உள்ளூராட்சி மாத நிகழ்வுகளையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய பாடசாலை மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் தவிசாளர் அ. சா. அரியகுமார் தலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க. சத்தியபாலன், பிரதேச சபை தவிசாளர் மற்றும் பிரதேச சபையின் செயலாளர் அ.வினோராஜ் ஆகியோர் அழைத்துவரப்படுவதையும், வெற்றியீட்டிய மாணவி ஒருவருக்குப் பிரதம விருந்தினர் பரிசில் வழங்குவதையும், மாணவிகளின் நடன நிகழ்வு ஒன்றையும் படங்களில் காணலாம். (02)

# தமிழகத்துக்கு தப்பித்தார் பாதாள உலகக்குழு தலைவர்!

கொழும்பு, ஜன. 02

பாதாள உலகத் தலைவரான மொஹமட் நஜிம் மொஹமட் இம்ரான் (கஞ்சிபான இம்ரான்) தமிழகத்துக்கு தப்பிச் சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய புலனாய்வு தகவல்களை மேற்கோள்காட்டி “தி இந்து” வெளியிட்டுள்ள செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கஞ்சிபான இம்ரான் இலங்கை நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில், அவர் கடந்த சனிக்கிழமை இராமேஸ்வாரத்துக்குள் பிரவேசித்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கொலைகள் மற்றும் திட்டமிட்ட பல்வேறு குற்றங்களுக்காக இலங்கை அதிகாரிகளால் தேடப்படும் இம்ரான், 2019 இல் டுபாயில் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டிருந்தார்.

அதற்கமைய இராமநாதபுரம் கடலோர மாவட்டங்களில் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ளுமாறும் தமிழக உளவுத்துறை, மாநிலம் முழுவதும் உள்ள உயர் பொலிஸ் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பொலிஸ் அதிகாரி வீட்டில் கொள்ளையிட்ட மூவர் கைது!

கொழும்பு, ஜன. 02

வடக்கு களுத்துறை பொலிஸ் நிலையத்தின் பல்வேறு முறைப்பாடுகள் பிரிவின் நிலையப் பொறுப்பதிகாரியின் வீட்டுக்குள் புகுந்து கொள்ளையிட்ட குழுச் சேர்ந்த மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அண்மையில், வெலிபன்ன, பொண்டுபிட்டிய பிரதேசத்தில் உள்ள பொலிஸ் அதிகாரியின் வீட்டுக்குள் புகுந்த ஆயுதம் தாங்கிய கொள்ளையர்கள், அவரின் மனைவியின் கைகளைக் கட்டி, இரண்டு கைபேசிகள் மற்றும் தங்க நகைகளை கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் அலுபோமுல்ல, குடா அருக்கொட மற்றும் அநுராதபுரம் பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறை குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொலிஸ் அதிகாரிகளினால் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.(ஐ)

# அரிசி, மின்சாரம், எரிபொருள் பாவனையில் பெரும் வீழ்ச்சி!

கொழும்பு, ஜன. 02

நாட்டில் எரிபொருள், அரிசி, மின்சார பாவனையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பணவீக்கம் காரணமாகவே எரிபொருள், உள்ளூர் அரிசி மற்றும் மின்சார பாவனை குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

2022 ஆம் ஆண்டு ஜனவரியுடன் ஒப்பிடுகையில் டிசெம்பர் மாதத்துக்குள் எரிபொருள் தேவை 50வீதம் குறைந்துள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் கியூ. ஆர். குறியீடுகள் மூலம் மட்டுமே எரிபொருளை வழங்குவதற்கான நடவடிக்கை மற்றும் எரிபொருள் இருப்புகளை சேமிப்பதனை பாவனையாளர்கள் தவிர்த்துள்ளதால் இது பாதிக்கப்பட்டுள்ளது.

சராசரியாக நாட்டின் நாளாந்த தேவை 65 லட்சம் கிலோ அரிசியாகும். பொருளாதார நெருக்கடிகள் காரணமாக மக்கள் நாளொன்றுக்கு உண்ணும் உணவின் அளவு குறைதல், உருளைக்கிழங்கு மற்றும் மாற்று உணவுகளுக்கு மாறுதல் போன்ற காரணங்களால் உள்ளூார் அரிசியின் பாவனை குறைந்துள்ளது என்று விவசாயிகள் சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் நாமல் கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

நாட்டின் வருடாந்த அரிசித் தேவை சுமார் 24 இலட்சம் மெற்றிக் தொன்களாகும். 2022 ஆம் ஆண்டில் 8 இலட்சம் மெற்றிக் தொன் அரிசி இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

அவை மலிவானவை. உள்ளூர் அரிசிக்கு நிகரான தரம் இல்லை. ஆனால், விலை குறைவாக இருப்பதால், அரிசி ஆலைகள் சந்தைக்கு வெளியிடும் அரிசியின் அளவை மட்டுப்படுத்துகின்றன. இதனால், மக்கள் வெளிநாட்டு அரிசியை வாங்கப் பழகுவதால், உள்ளூர் அரிசிக்கான தேவையும் குறைந்துள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் 76வீதம் மின்கட்டணம் அதிகரித்ததன் காரணமாக, உள்நாட்டு மின்சார பாவனை குறைவாலும், சிறு கைத் தொழில்கள் மூடப்பட்டதாலும் நாட்டின் மின்சார தேவை குறைந்துள்ளதாக மின்சார பொறியியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நாட்டில் மின்சாரத்தைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை சுமார் 74 இலட்சம் பேர். மின்சார சபையின் தொழில்நுட்ப பொறியாளர்கள் மற்றும் அதிகாரிகள் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதனால் மின்சார பாவனை உள்நாட்டில் 10வீதமாகவும் கைத்தொழில் துறையில் 15 வீதமாகவும் குறைந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-சி)

# காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் புதுவருட தினத்திலும் கவனவீர்ப்பு!

வவுனியா, ஜன. 02

புது வருட தினமான நேற்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள்



வவுனியாவில் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட மற்றும் வெள்ளை வானில் கடத்தப்பட்ட தமது உறவுகளுக்கு நீதி வேண்டும் - அவர்களை விடுவிக்க வேண்டும் என்று கோரியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் இறையாண்மையுடனான தீர்வே பாதிக்கப்பட்டோருக்கு தேவை என்றும் கூறினார்.

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் 2100 நாட்களை கடந்து தொடர்ச்சியாக போராடி வரும் போராட்டப் பந்தலின் முன்பாக இந்தக் கவனவீர்ப்பு நடைபெற்றது. (ஐ)

# பேருந்து கவிழ்ந்து விபத்து; 15 பேர் காயங்களுக்கு இலக்கு

கொழும்பு, ஜன. 02

கதிர்காமத்திலிருந்து தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பயணித்த பேருந்து விபத்துக்கு உள்ளானதில் 15 பேர் காயமடைந்தனர்.

விபத்தில் சாரதி உட்பட 15 பயணிகள் காயமடைந்து காலி கராப்பிட்டி போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் 11 ஆண்களும் 4 பெண்களும் மூன்று குழந்தைகளும் அடங்குவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.



தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பத்தேகம மற்றும் பின்னதுவ இடையே 88ஆவது கிலோமீற்றர் தூணுக்கு அருகில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

யாத்திரீகர்கள் குழுவை ஏற்றிச் சென்ற பேருந்தே விபத்துக்குள்ளானது.

சாரதி தூங்கியதால் விபத்து ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

மேலும் குறித்த பேருந்து வீதியை விட்டு விலகி சுமார் 100 மீற்றர் தூரம் பயணித்து பாறையுடன் மோதி கவிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# அரசிலிருந்து மற்றொரு குழு சுயாதீனமாக இயங்க முடிவு?

கொழும்பு, ஜன.02

**பொதுஜன பெரமுன கட்சியில் இருந்து மேலும் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் சுயாதீனமாக இயங்குவதற்கான கலந்துரையாடலை தொடங்கியுள்ளனர் என்று கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.**

இது தொடர்பாக, பாராளுமன்ற உறுப்பினர்களான விமலவீர திசநாயக்க மற்றும் ஜகத் குமார ஆகியோர் ஏற்கனவே பகிரங்கமாக கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். அவர்களுடன் மற்றும் சில பாராளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து கொள்வார்கள் என்று தெரிய வருகிறது.

தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு எதிர்பார்த்த தீர்வுகளை வழங்குவதற்கு பதிலாக, தற்போதுள்ள பிரச்னைகளை மேலும் சிக்கலாக்கும் தீர்மானங்களை அரசு மேற்கொள்வதால் இந்த தீர்மானத்தை எடுக்க வேண்டியுள்ளதாக அந்தப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூறியுள்ளனர். (ஐ-சி)



2023 புதுவருட தினமான நேற்று கொழும்பு தாமரை கோபுரத்தில் இடம்பெற்ற வானவேடிக்கை...!

# ஆசிரியர்களின் கடனுக்கான வட்டி வீதம் அதிகரிக்கப்பட்டது

*- இலங்கை ஆசிரியர் சங்கம் எதிர்ப்பு -*

கொழும்பு, ஜன. 02

அதிபர் - ஆசிரியர்களுக்கான 'குருசெத்த' கடனுக்கான கடன் மற்றும் வட்டி தவணைகளை செலுத்தும் போது 9.5 சதவீதமாக இருந்த வட்டி 15.5 சதவீதம் வரை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கு இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் தகவல் வெளியிட்டுள்ள அந்த சங்கத்தின் அமைப்பாளர் சுந்தரலிங்கம் பிரதீப் கூறுகையில், ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் பிரச்னையை எதிர்நோக்கியுள்ள இந்த சந்தர்ப்பத்தில், அரச வங்கிகள் மூலம் குருசெத்த கடன் திட்டத்தின் கீழ் குருசெத்த கடனுக்கான வட்டியை அதிகரிக்க வங்கிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன.

அரசாங்கத்தால் முன்மொழிக்கப்பட்ட பாதீட்டு திட்டத்தில் அதிபர் ஆசிரியர்களுக்கு எவ்விதமான கொடுப்பனவுகளும் அதிகரிக்கப்படவில்லை - என்றார்.

இந்த விடயம் தொடர்பில் அந்த சங்கத்தின் செயலாளர் மகிந்த ஜயசிங்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். (ஐ)

# தேவாலயத்துக்கு ஆட்களை ஏற்றிசென்ற பஸ்மீது தாக்குதல்!

*சுழிபுரத்தில் சம்பவம்*



யாழ்ப்பாணம், ஜன. 02

சுழிபுரம் - பாண்டவட்டை பகுதியில் இருந்து தேவாலயம் ஒன்றுக்கு மக்களை ஏற்றிச் சென்ற பேருந்து மீது தாக்குதல் நேற்று முன்தினம் நள்ளிரவு வேளை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது பேருந்தில் பயணித்த இருவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பில் அறிந்த வட்டுக்கோட்டை பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் சம்பவ இடத்துக்கு வந்ததால், அப்பகுதியில் மிகுந்த பதற்றம் நிலவியது.

வட்டுக்கோட்டை பொலிஸார் வழக்கு பதிவு செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு 6 மாதத்தில் ரூ.3600 கோடி இலாபம்!

கொழும்பு, ஜன. 02

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆறு மாத காலப்பகுதியில் 3 ஆயிரத்து 600 கோடி ரூபாய் இலாபத்தை ஈட்டியுள்ளது என்று இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் சுதந்திர பணியாளர்கள் சங்கத்தின் செயலாளர் நிஷாந்த ரணவீர தெரிவித்துள்ளார்.

கடந்த ஜூலை ஜூலை மாதம் தொடக்கம் டிசெம்பர் மாதம் வரையான காலப் பகுதியிலேயே இந்த இலாபம் ஈட்டப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

எனினும், கடந்த 2022ஆம் ஆண்டில் விலையேற்றம், விநியோகக் கட்டுப்பாட்டால் எரிபொருள் பாவனை குறைவடைந்துள்ளது என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ-சி)

# நெல்லியடி கூட்டு பாலியல் வன்புணர்வு; 9 வருடங்களின் பின்னர் ஒருவர் கைது!

வடமராட்சி, ஜன. 02

நெல்லியடியில் கூட்டு பாலியல் வன்புணர்வு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் 9 வருடங்களின் பின்னர் கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 2014 மார்ச் மாதம் 07ஆம் திகதி நெல்லியடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முள்ளி பகுதியில் பெண்ணொருவர் கூட்டுப்பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த வேளை, சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர் தப்பி சென்ற நிலையில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இருவருக்கும் எதிராக வழக்கு விசாரணைகள் இடம்பெற்ற நிலையில் தப்பிச்சென்றவருக்கு எதிராக பகிரங்க பிடியாணை பிறப்பிக்கப்பட்டு இருந்தது.

தப்பி சென்ற நபர் வெளிநாடு ஒன்றுக்கு சென்று, அங்கு சில காலம் பணிபுரிந்து விட்டு, மீண்டும் நாடு திரும்பி கொழும்பு, ஆட்டுப்பட்டி தெருவில் கடையொன்றில் பணிபுரிந்து வந்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பிரகாரம் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

*- போராட்டக்காரர்கள் நுழைந்த பின்னர் -*

# ஜனாதிபதி மாளிகையிலிருந்த 39 ஓவியங்களை காணவில்லை!

கொழும்பு, ஜன. 02

போராட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகையில் பிரவேசித்த பின்னர் அங்கிருந்த 39 மர மற்றும் கேன்வாஸ் ஓவியங்கள் காணாமல் போயுள்ளன.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் குழுவினர் மேற்கொண்ட விசாரணையின் போதே இந்த தகவல் வெளியாகியுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி மாளிகையின் 209 ஓவியங்கள் மற்றும் சித்திரங்கள் பாதுகாப்புக்காக தொல்பொருள் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. அத்துடன், அதிகாரிகள் குழுவொன்று அரண்மனைக்கு சென்று தற்போது அடிப்படை பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிய வருகின்றது.

தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் (இரசாயனப் பாதுகாப்பு) திருமதி கீதானி குருப்புஆராச்சி இது குறித்து தெரிவிக்கையில், ஓவியங்களின் சிதைவு நிலைமைகளை ஆராய்ந்து, பாதுகாப்பு தொடர்பான பூர்வாங்க சிபாரிசு அறிக்கையை தயாரிப்பதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது - என்றார். (ஐ)

**உங்கள் துயரங்களை பகிர்ந்துகொள்ள யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தளம்**

துயர் .நெற்
THUYAR.NET

**துயர் நெற்றில் பிரசுரமாகும் அனைத்து விளம்பரங்களும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும்**

ஈழநாடு
Eelanadu

**ஈழநாடு தினசரியிலும் வெளியிடப்படும் யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும்**

DAN news

**டான் நியூஸ் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகும்**

விபரங்களுக்கு: thuyar.net
Tel: 0094 752 225 225

# ரிமோட் வாக்குப் பதிவு இயந்திரம் யாருக்கு உண்மையான பலன்?

**- விஷ்ணு பிரகாஷ்**

இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் வேலைக்காகப் புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் அனைவரும் அந்தந்த மாநிலங்களில் இருந்தவாறே தங்கள் சொந்த ஊரில் நடைபெறும் தேர்தலின் போது வாக்களிக்கும் வகையில் இந்திய தேர்தல் ஆணையம் புதிய அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இந்திய தேர்தல் ஆணையத்தால் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ரிமோட் வாக்குப் பதிவு இயந்திரம் மூலமாகப் புலம் பெயர் தொழிலாளர்களின் வாக்களிக்கும் உரிமையை உறுதி செய்ய முடியும் என்று இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜனவரி 16ஆம் திகதி மாநில மற்றும் தேசிய கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் செயல்முறை விளக்கம் அளிக்கப்படும் என்று இந்திய தேர்தல் ஆணையத்தின் தலைமை தேர்தல் ஆணையர் அறிவித்துள்ளார்.

### ரிமோட் வாக்குப் பதிவு இயந்திரம் என்றால் என்ன?

90 கோடிக்கும் அதிகமான வாக்காளர்கள் உள்ள இந்தியாவில் மத்திய அரசையும் மாநில அரசுகளையும் தேர்வு செய்ய நடக்கும் தேர்தல்களை இந்திய தேர்தல் ஆணையம் நடத்தி வருகிறது.



இந்தத் தேர்தலில் வாக்களிக்கும் இந்திய மக்கள் அனைவரும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மூலமாகத் தங்களது ஜனநாயக கடமையை நிறைவேற்றி வருகின்றனர். இந்த இயந்திரத்தை இந்தியாவின் பொதுத் துறை நிறுவனங்களான பாரத் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனமும் எலக்ட்ரானிக்ஸ் கார்ப்பரேசன் ஆஃப் இந்தியாவும் உருவாக்குகின்றன.

இந்தியாவில் கடந்த 2019ஆம் ஆண்டு நடைபெற்ற மக்களவை தேர்தலில் 67.4 வீத மக்கள் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்திருந்தனர். 30 கோடிக்கும் அதிகமானோர் இந்தத் தேர்தலில் வாக்களிக்கவில்லை.

இவர்களில் பெரும்பாலானோர் வேலை தேடி சொந்த ஊர்களில் இருந்து வெளி மாநிலங்களுக்குச் சென்ற நிலையில், பலர் வாக்களிப்பதற்குச் சொந்த ஊருக்குச் செல்லவில்லை.

விடுபட்ட வாக்காளர்களும் வாக்களிக்க ஏதுவாக இந்திய தேர்தல் ஆணையம் புதிதாக ரிமோட் வாக்குப் பதிவு இயந்திரம் ஒன்றை அறிமுகம் செய்யவுள்ளது. இந்த ரிமோட் வாக்குப் பதிவு இயந்திரம் மூலமாக இந்தியாவில் எந்த ஊரில் இருந்தாலும், வாக்காளர்கள் தங்களது சொந்த ஊரில் நடைபெறும் தேர்தலில் வாக்களிக்க முடியும் என்கிறது இந்திய தேர்தல் ஆணையம்.

இயந்திரத்தின் உதவியுடன் 72 தொகுதிகளில் உள்ள வாக்குச் சாவடிகளில் வாக்களிக்க முடியும். இதன் மூலம் புலம் பெயர் தொழிலாளர்கள் தேர்தலில் எளிதாக வாக்களிக்க முடியும் என்று கூறி, இந்த இயந்திரத்தின் மாதிரியை உருவாக்கி இருக்கிறது.

> **ரிமோட் வாக்குப் பதிவு இயந்திரம் மூலமாக இந்தியாவில் எந்த ஊரில் இருந்தாலும், வாக்காளர்கள் தங்களது சொந்த ஊரில் நடைபெறும் தேர்தலில் வாக்களிக்க முடியும் என்கிறது இந்திய தேர்தல் ஆணையம். இயந்திரத்தின் உதவியுடன் 72 தொகுதிகளில் உள்ள வாக்குச் சாவடிகளில் வாக்களிக்க முடியும். இதன் மூலம் புலம் பெயர் தொழிலாளர்கள் தேர்தலில் எளிதாக வாக்களிக்க முடியும் என்று கூறி, இந்த இயந்திரத்தின் மாதிரியை உருவாக்கி இருக்கிறது.**

### காங்கிரஸ் கட்சி எதிர்ப்பு

ரிமோட் வாக்குப்பதிவு இயந்திரம் தொடர்பாக எம்மோடு பேசிய, தமிழ்நாடு சட்டமன்ற காங்கிரஸ் கட்சி தலைவரான செல்வப்பெருந்தகை, பாஜக அரசின் உந்துதலின் பேரில் தான் புதிதாக இந்த வாக்குப்பதிவு இயந்திரம் கொண்டு வரப்பட்டுள்ளதாக கூறினார்.

மேற்கொண்டு பேசிய அவர், ‘ஏற்கெனவே நடைமுறையில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தை ஹேக் செய்ய முடியும் என பல்வேறு சந்தர்ப்பங்களில் தொழில்நுட்ப வல்லுநர்கள் ஆதாரத்துடன் தெரிவித்துள்ள நிலையில், இந்த ரிமோட் வாக்குப் பதிவு இயந்திரத்தை நம்ப முடியாது.



மாறாக புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் வாக்குகளை தபால் வாக்குகள் மூலம் பதிவு செய்து, அவர்களின் வாக்களிக்கும் உரிமையை நிலைநாட்டலாம்,” என்றார் செல்வப் பெருந்தகை.

ரிமோட் வாக்குப்பதிவு இயந்திரத்தை அறிமுகம் செய்வது ஜனநாயகத்திற்கு பேராபத்தாக அமைந்துவிடும் என மக்களவை உறுப்பினரும், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவருமான தொல்.திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பை எதிர்த்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ‘2024 தேர்தலில் வலுவான கூட்டணி கட்சிகள் ஏதும் இல்லாமல் பாஜக தனித்து விடப்பட்டுள்ள நிலையில், தேர்தல் ஆணையத்தை கூட்டணி சேர்த்துக்கொண்டு வெற்றி பெற்று விட வேண்டும் என்று பாஜக திட்டமிட்டு இருப்பதையே இந்த ரிமோட் வாக்குப்பதிவு இயந்திரம் தொடர்பான அறிவிப்பு காட்டுகிறது,” எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### ரிமோட் இயந்திரத்தின் மறுபக்கம்

இந்திய தேர்தல் ஆணையம் அறிமுகப்படுத்தவுள்ள ரிமோட் வாக்குப் பதிவு இயந்திரத்தின் மூலம் வெளிநாடு வாழ் இந்தியர்களை, தேர்தலில் வாக்களிக்கச் செய்ய முடியும். அந்தளவுக்கு தற்போது வளர்ந்துள்ள தொழில்நுட்பத்தின் உதவியுடன் பாதுகாப்பாக வாக்குப்பதிவை நடத்த முடியும், என்கிறார் இந்திய தேர்தல் ஆணையத்தின் முன்னாள் தலைமை தேர்தல் ஆணையரான கோபால்சாமி.

‘தொழில்நுட்ப ரீதியாக ரிமோட் வோட்டிங் சாத்தியம் என்றாலும், இந்தியாவில் உள்ள அரசியல் கட்சிகள் இதை ஏற்றுகொள்வதில் சிக்கல்கள் இருக்கின்றன.

சான்றாக வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்களுக்கு தேர்தல் நடக்கும் போது எத்தனை மாநில கட்சிகளால், வெளிநாட்டில் உள்ள வாக்குச்சாவடிகளில் தேர்தல் முகவரை நியமித்து கண்காணிக்க முடியும்?

அதனால் இந்திய அரசியல் கட்சிகள் இந்த ரிமோட் வாக்குப்பதிவு இயந்திரத்தை ஏற்றுக் கொள்வது சற்று கடினம் தான்,” என்றார் முன்னாள் தலைமை தேர்தல் ஆணையரான கோபால்சாமி.

மேலும் சென்னையில் வசிக்கும் புலம் பெயர்ந்த தொழிலாளர், வேறு மாநிலத்தில் நடைபெறும் மக்களை, சட்டசபை தேர்தலுக்கு வாக்களிக்கும் போது பிரச்னைகள் ஏற்படாது.

மாறாக உள்ளாட்சி தேர்தலின் போது சொந்த ஊரில் வாக்களிக்கும் புலம் பெயர்ந்த தொழிலாளி, தான் வேலை பார்க்கும் ஊரில் ஏற்படும் பிரச்னை தொடர்பாக உள்ளாட்சிப் பிரதிநிதியை அணுகும் போது இருவருக்கும் இடையே முரண்பாடுகள் ஏற்படும் சிக்கல், ரிமோட் வாக்குப் பதிவு இயந்திரம் செயல்பாட்டுக்கு வரும்போது ஏற்பட வாய்ப்புள்ளது என்பது கோபால்சாமியின் கருத்தாக இருக்கிறது.

இத்தனை சிக்கல்கள் உள்ள நிலையில், ரிமோட் வாக்குப்பதிவு இயந்திரத்தின் மூலம் புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கு வாக்களிக்கும் வாய்ப்பு எளிதாக்கப்படுமா என்பது பற்றி ஜனவரி 16ஆம் திகதி இந்திய தேர்தல் ஆணையம் நடத்தும் ஆலோசனைக் கூட்டத்திற்கு பிறகு தெரிய வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.



செல்வப்பெருந்தகை



தொல்.திருமாவளவன்



கோபால்சாமி



வைகைச்செல்வன்

> குழந்தைகள் எப்போதும் கெட்ட வார்த்தைகளைப் பேசுவதில்லை. கேட்கும் வார்த்தைகளைப் பேசி செய்யும் செயல்களையும் பார்க்கிறார்கள். குழந்தைகள் முன்னிலையில் பண்பான வார்த்தைகளைப் பயன்படுத்துங்கள். அவர்களுக்கு நல்வழி காட்ட வேண்டிய கடமை பெற்றோருக்கும், வீட்டின் பெரியவர்களுக்கும் உண்டு.




- ஆர்.வேல்முருகன்

# புத்தாண்டு, நம்பிக்கை, தீர்மானம்

மனித குலம் அறிந்திராத துயரமான அனுபவத்தைத் தந்தது 2020-ஆம் ஆண்டு. அதற்கு முந்தைய ஆண்டின் இறுதியிலேயே சீனாவில் உருவாகிய கொரோனா தீநுண்மி, 2020-ஆம் ஆண்டில் உலக நாடுகளில் பரவியது.

இதனால் உலக நாடுகளின் இயக்கமே பல மாதங்களுக்குத் தடைபட்டது. தனிமனிதர்கள் மட்டுமன்றி, நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டது. அனைவருமே ஏதாவது ஒரு வகையில் பாதிக்கப்பட்டு தங்கள் வாழ்வாதாரத்தை மட்டுமில்லாமல், ஏராளமானோர் இன்னுயிரையும் இழந்தனர்.

கொரோனா பெருந்தொற்று கற்றுத்தந்த பாடங்கள் அதிகம். இதுவரை சேமிப்பைப் பற்றித் தெரியாதவர்கள்கூட இப்போது சேமிப்புதான் வாழ்வில் ஆதார ஸ்ருதி என்பதைப் புரிந்து சேமிப்புக்கு முக்கியத்துவம் தரத் தொடங்கியுள்ளனர்.

முகக் கவசம், தனிமனித இடைவெளி என வாழ்க்கை முழுவதும் பின்பற்றத்தக்க பல நல்ல வழிமுறைகளையும் கொரோனா வழங்கியுள்ளது.

கொரோனாவிலிருந்து உலகம் மீண்டுவிட்டதாக அறியப்பட்ட வேளையில், சீனா உள்ளிட்ட சில நாடுகளில் கொரோனாவின் தாக்கம் மீண்டும் கவலையை ஏற்படுத்துகிறது. இச்சூழ்நிலையில், 2023-ஆம் ஆண்டை புதிய உறுதிமொழியேற்று வரவேற்கலாம்.

ஆரோக்கியத்துக்கு முக்கியத்துவம் தந்து தினமும் உடற்பயிற்சி செய்யலாம். குழந்தைகளுக்கும் அவற்றைக் கற்றுத் தரலாம். வாழ்க்கைச் சுமையை ஏற்று வழிநடத்திச் செல்வதற்குப் பொருள் தேடி இளமையைத் தொலைத்துவிட்டு திரும்பிப் பார்க்கும்போது முதுமையில் நரை தெரியும். அழகான வாழ்க்கையை ரசித்து வாழத் தெரியாமல் முதுமைப் பருவத்தில் எப்படி வாழ்க்கையை வாழவில்லை என்பதை அசைபோட்டு துயரம் அடைவோர் ஏராளம். அதை விடுத்து உங்களுக்கென தனி நேரம் ஒதுக்கி உறவுகள், நட்புகளுடன் மனம் விட்டுப் பேசுங்கள். இதன்மூலம் புத்துணர்வு பெற முடியும். புத்தாண்டிலாவது இதை முயற்சி செய்யலாம்.

மனித வாழ்க்கையில் நினைவுகளாகிப் போன சுவடுகளை என்றும் மறக்க முடியாது. எப்போதும் பழைய நிகழ்வுகள் நம்மை உயிர்ப்புடன் வைத்திருக்கும். தினமும் நாள்குறிப்பு எழுதுங்கள். இதில் முக்கியமானவர்களின் பிறந்த நாள், திருமண நாள்களைக் குறித்து வைத்து வாழ்த்துச் சொல்லுங்கள். முடிந்தால் பரிசளியுங்கள். இது மிகவும் மகிழ்ச்சிகரமாக அமையும்.

கிருஷ்ணனுக்கு நண்பன் குசேலன் அவல் கொடுத்தது போல பரிசு சிறியதெனக் கவலைப்படக் கூடாது. அதைக் கொடுக்கும் மனம் விசாலமான அன்பைப் பொழிய வேண்டும், அதுதான் முக்கியம். இந்த நினைவுகள் காலம் முழுவதும் நம்மை உயிர்ப்புடன் எழுச்சியாக வைத்திருக்க உதவும்.

புத்தாண்டில் இருந்து நேர்மறையான எண்ணங்களை வளர்த்துக் கொள்ளுங்கள். இது எப்போதும் நம்முடைய முன்னேற்றத்தை உயர்த்தும். பெரியவர்கள் எப்போதும் மகன், மகள் என பாசத்தைப் பிரித்துக் காட்டாதீர்கள்.

இது அவர்களின் குழந்தைகளிலும் எதிரொலிக்கும். இதன்மூலம் மன அமைதியைப் பெரியவர்கள்தான் இழப்பார்கள். குழந்தைகளின் மனதிலும் வெறுப்பை விதைக்காதீர்கள்.

ஒவ்வொருவருக்கும் ஒரு திறமை ஆழப் புதைந்து கிடக்கும். முடிந்தால் அதை ஊக்குவித்து திறமையை வெளிக்கொணர உதவுங்கள். நல்ல ஆசிரியர் ஒருவரைப் போல அதைச் செய்யுங்கள். அதுதான் குழந்தைகளின் மீதான அன்பைச் சொல்லும் மொழி. இது வீணையை மீட்டுவதைப் போல எப்போதும் இனிய ராகங்களால் இல்லமும் உள்ளமும் நிறைந்திருக்க உதவி செய்யும். இல்லாவிட்டால் அபஸ்வரமாகத்தான் இருக்கும்.

தேவையான சில இடங்களில் நாணல் போல வளைந்து செல்லுங்கள். புயல் வந்தாலும் மழை வந்தாலும் கவலையில்லாமல் ஏதாவது ஒருபுறம் சாய்ந்து கொண்டிருக்க முடியும். ஆடிக் காற்றிலும் நாணல் யாருக்கும் கவலையில்லாமல் வளையும். ஆனால், மரங்களின் நிலை- எதிர்த்து நின்றால் வேரோடு பிடுங்கி எறியப்படும். இதை மனதில் வைத்து முடிந்த அளவு விட்டுக் கொடுக்கும் பண்பை வளர்த்துக் கொள்ளுங்கள்.

விட்டுக் கொடுப்பவர்கள் கெட்டுப் போவதில்லை. முகத்தில் புன்னகையை வளர்த்துக் கொள்ளுங்கள். நம்மை பிற உயிரினங்களிடமிருந்து வித்தியாசப்படுத்திக் காட்டுவது புன்னகைதான். எப்போதும் புன்னகை மலர்ந்திருக்கட்டும்.

ஆண்டில் சில நாள்களாவது குடும்பத்துடன் சுற்றுலா செல்லுங்கள். இது மனதில் என்றும் அழியாத கோலங்களாக, அகற்ற முடியாத நினைவாக இருக்கும். எப்போதும் அசைபோட்டுக் கொள்ளலாம். முடிந்த அளவு அனைவரும் தினமும் ஒருவேளையாவது குடும்பத்துடன் உணவு உண்ணுங்கள். அப்போது தினமும் நடந்த நல்ல நிகழ்வுகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள். இது குழந்தை வளர வளர எனக்காகக் குடும்பம் காத்திருக்கிறது என்பதைக் கற்றுத் தரும். இது பிணைப்பை அதிகப்படுத்தும்.

முதியவர்களுடன் நேரத்தைச் செலவிடுங்கள். ஆண்டுக்கு ஒருமுறையாவது அருகே உள்ள ஆதரவற்றோர் இல்லங் களுக்குச் சென்று அவர்களுடன் உறவாடுங்கள். அது அவர்களுக்கு மட்டுமல்லாமல் நமக்கும் புத்துணர்வு தரும். குழந்தைகளை அழைத்துச் சென்றால் அவர்களின் மனதில் கண்டிப்பாக மாற்றம் உண்டாகும்.

குழந்தைகள் எப்போதும் கெட்ட வார்த்தைகளைப் பேசுவதில்லை. கேட்கும் வார்த்தைகளைப் பேசி செய்யும் செயல்களையும் பார்க்கிறார்கள். குழந்தைகள் முன்னிலையில் பண்பான வார்த்தைகளைப் பயன்படுத்துங்கள். அவர்களுக்கு நல்வழி காட்ட வேண்டிய கடமை பெற்றோருக்கும், வீட்டின் பெரியவர்களுக்கும் உண்டு.

உலகத்துக்காகவும் எதிர்கால சந்ததியினர் வாழ்க்கை நன்றாக இருக்கவும் வாழ்நாளில் வாய்ப்பிருக்கும்போது மரங்களை நட்டுப் பராமரியுங்கள். உங்களுக்குப் பிறகும் அந்த மரம் உங்கள் பெயரைச் சொல்லும். இந்தத் தீர்மானங்களை 2023 புத்தாண்டில் எடுத்துக் கொண்டு, அவற்றைச் செயல்படுத்துவோம், நல்வழி காண்போம்.



# இந்த ஆண்டாவது அமைச்சு கிட்டுமா? பலத்த எதிர்பார்ப்பில் பெரமுனவினர்!

கொழும்பு, ஜன. 02

பொதுஜன பெரமுன கட்சியின் மூத்த தலைவர்களுக்கு அமைச்சு பதவிகளை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டமையால் அந்தக் கட்சிக்குள் குழப்பங்கள் - எதிர்ப்புகள் அதிகரித்துள்ளன என்று அந்தக் கட்சிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவை மாற்றத்தை நாளுக்கு நாள் வேண்டுமென்றே ஒத்திவைக்கிறார் என்றும் பொதுஜன பெரமுனவின் மூத்த மற்றும் இளைய தலைவர்கள் கடுமையாக குற்றம் சாட்டி வருகின்றனர்.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் சிலருக்கு அமைச்சுப் பதவி வழங்குவதாகவும், குழுக் கூட்டங்களில்கூட பொதுஜன பெரமுன கட்சியின் மூத்த தலைவர்களுக்கு அமைச்சு பதவி வழங்குவ தாகவும் ஜனாதிபதி உறுதிமொழி அளித்தார். ஆனால், அவர் அதனைச் செய்யவில்லை என்றும் பெரமுன கட்சியினர் விசனப்பட்டுள்ளனர்.

இதனிடையே, புதிய அமைச்சரவை அமைச்சர்களாகப் பதவியேற்றுள்ளவர்கள் தமது பிரதேசத்தில் எந்தப் பணிகளையும் செய்ய முடியாத நிலை காணப்படுகிறது.

பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுபவமும் அறிவும் இல்லாத காரணத்தினால் கடும் பிரச்னை ஏற்பட்டுள்ளதாகவும் அந்தக் கட்சியினர் சாடியுள்ளனர்.

நளின் பெர்னாண்டோ போன்றவர்கள் முதன் முறையாக அமைச்சர் பதவியை மட்டும் பெற்றுக் கொண்டு நேரடியாக அமைச்சரவையில் நியமிக்கப்பட்டு பொதுஜன பெரமுன கட்சியின் மூத்த தலைவர்களான மகிந்தானந்த அளுத்கமகே, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ போன்றோரே அவர்களை வழி நடத்துகின்றனர்.

எங்களிடம் அமைச்சுகள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒன்றுதான் என்றும் விசனிக்கப்பட்டதாகவும் தகவல்.

இதனிடையே, பிறந்துள்ள புதுவருடத்திலாவது தமக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட வேண்டும் என்ற நம்பிக்கையுடன் பெரமுனவின் மூத்த தலைவர்கள் காத்திருக்கின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

(ஐ-சி)

# காலிமுகத்திடல் போராட்ட குழு உள்ளூராட்சி தேர்தலில் போட்டி

கொழும்பு, ஜன. 02

எதிர்வரும் உள்ளூராட்சி சபை தேர்தலில் காலிமுகத்திடல் போராட்டக் குழுவினரும் போட்டியிடவுள்ளனர் என்று தென்னிலங்கை தகவல்கள் தெரிவிக் கின்றன.

எதிர்வரும் உள்ளூராட்சி சபை தேர்தலில், காலிமுகத் திடல் போராட்ட ஆர்வலர்களின் பல குழுக்கள் புதிய கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்களில் இருந்து முக்கிய நகரங்களில் உள்ள மாநகர சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளில் போட்டியிட முடிவு செய்துள்ளன.

காலிமுகத்திடல் போராட்ட குழுவினர் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, காலி, மாத்தறை, இரத்தினபுரி போன்ற மாவட்டங்களில் போட்டியிட தீர்மானித்துள்ளனர்.

ஏற்கனவே, வேட்புமனு பட்டியல் கள் தயாரிக்கப்பட்டு வரும் நிலையில், மாவட்ட அளவில் இளைஞர்களுக்கு வேட்புமனுக்களை வழங்க குழுக்கள் தயார் நிலையில் உள்ளன என்றும் அந்தத் தகவல்கள் தெரிவித்தன. (ஐ-சி)

# விபத்தில் 12 பேர் காயம்!

கொழும்பு, ஜன. 02

கொழும்பு - கண்டி பிரதான வீதியில் கேகாலை - மொலகொட பகுதியில், இரண்டு வாகனங்கள் நேருக்கு நேர் மோதி ஏற்பட்ட விபத்தில் 12 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் கேகாலை மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

கொழும்பிலிருந்து தெல்தோட்டை நோக்கிப் பயணித்த வான் ஒன்றும், கண்டியிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த வான் ஒன்றுமே நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.

# 20 ஆயிரம் வணிக நிலையங்கள் ஜனவரியில் மூடப்படும் அபாயம்!

## கடன் காலத்தை நீடிக்குமாறு வேண்டுகோள்

கொழும்பு, ஜன. 02

வங்கி மற்றும் நிதி நிறுவனங் களின் கடன்களை மீளச் செலுத்தும் மொரடொரியம் என்ற நிவாரணக் காலத்தை மேலும் நீடிப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறு உள்ளூர் வணிக நிறுவனங்கள், மத்திய வங்கியிடம் வலியுறுத்தியுள்ளன.

தேசிய வர்த்தக பாதுகாப்பு சபையின் கூற்றுப்படி, தேசிய பொருளாதாரத்தில் நிலவும் சவால்கள் காரணமாக சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களிடமிருந்து பெறப் பட்ட கடன்கள் ஆயிரம் பில்லியன் ரூபாயை எட்டியுள்ளது.

இந்தநிலையில், தற்போ துள்ள அதிக வட்டி விகிதத்தில் கடனை செலுத்த முடியாமல் தவிப்பதாக உறுப்பினர்கள் தொடர்ந்து முறையிட்டு வரு கின்றனர் என்று சபையின் தலைவர் மகேந்திர பெரேரா தெரிவித்தார்.

ஏற்கனவே வழங்கப்பட்ட கடன் மீளச்செலுத்தும் கால நீடிப்பு அவகாசம் 2022 டிசம் பர் 31ஆம் திகதி நிறைவடைந்தது.

எனவே, இந்த காலத்தை நீடிக்குமாறு மத்திய வங்கியின் ஆளுநரிடம் கோரிக்கையை தேசிய வர்த்தக பாதுகாப்பு சபையின் தலைவர் முன்வைத்துள்ளார். வர்த்தகர்களுக்கும் வங்கிகளுக்கும் இடையிலான இயல்பு சூழ்நிலையை உருவாக்க வேண்டும். இல்லாவிட்டால், இந்த நாட்டில் வங்கித் துறையும் வீழ்ச்சியடையும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

வணிகத்துறையால், பெறப் பட்ட கடன்களுக்கான வட்டி மற்றும் மூலதனத்தைத் திருப்பிச் செலுத்துவதில் தாமதத்தை ஏற்படுவதற்கு அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை யானால், எதிர்வரும் ஜனவரி மாதத்திற்குள் குறைந்தது 20,000 வணிகங்களை மூட வேண்டிய கட்டாயம் ஏற்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை சர்வதேச நாணய நிதியத்தின் நிவாரணம் கிடைத்தவுடன், ஆசிய அபிவி ருத்தி வங்கி போன்ற நிறுவனங்களின் உதவியைப் பெறுவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய முயற்சிகள் மேற்கொள் ளப்படும் என மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீர சிங்க கடந்த வியாழனன்று உள்ளூர் வர்த்தக சங்கங்களிடம் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

## கல்வி tv CHANNEL-1

**02.01.2023**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

## கல்வி tv CHANNEL - 2

**02.01.2023**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# நிந்தவூர் பொலிஸார் முன்மாதிரி செயல்பாடு!

நிந்தவூர், ஜன. 02

“பொலிஸார் தமது கடமைகளுக்கப்பால் மனிதாபிமான செயல்பாடுகளையும் முன்னெடுப்பது வரவேற்கத்தக்கதாகும். இந்த வகையில் நிந்தவூர் பொலிஸார் முன்னெடுத்துள்ள உதவி தேவைப்படும் வறிய மக்களுக்கு உதவும் செயல் திட்டம் பாராட்டத்தக்கதாகும்” - இவ்வாறு, அம்பாறை பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர். எம். டி. ஜே. ரத்நாயக்க கூறினார்.

புதிதாக நிறுவப்பட்ட நிந்தவூர் பொலிஸ் நிலையத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட, உதவி தேவைப்படும் வாழும் வறிய மக்களுக்கான உதவி வழங்கும் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.எம். நஜீப்பின் சிந்தனையிலான இந்த வறிய மக்களுக்கு உதவும் திட்டத்தின் முதற் கட்டமாக ஐம்பது மிக வறிய குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு தலா ஐந்தாயிரம் ரூபா உலருணவுப் பொருட்களடங்கிய பொதிகள் நிகழ்வில் வழங்கப்பட்டன.

பொலிஸ் நிலைய ஆலோசனை சபையினர் மற்றும் பிரதேச நலன் விரும்பிகளின் ஆதரவுடன், இந்த உதவித்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்படி நிகழ்வில் நிந்தவூர் பிரதேசத்தைச் சேர்ந்த 50 தமிழ், முஸ்லிம் குடும்பத்தினர் உதவிப் பொருட்களைப் பெற்றுக்கொண்டனர். இந்த நிகழ்வில் கல்முனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரி.எச்.டி.எம். எல்.புத்திக கௌரவ அதிதியாகவும், நிலைய ஆலோசனை சபைத்தலைவரும், உதவிக்கல்விப் பணிப்பாளருமான ஏ.எம்.றசீன், நிந்தவூர் மத்தியஸ்த சபைத் தவிசாளர் பல்கீஸ் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரத்நாயக்க தொடர்ந்து உரையாற்றுகையில் பின்வருமாறு கூறினார்.

“சட்டம், சமாதானம், அமைதி நிலை நாட்டுவதைக் கடமையாகக் கொண்ட பொலிஸார் இத்தகைய மனிதாபிமான செயல்பாடுகளிலும் ஈடுபடுவது பாராட்டத்தக்கதாகும். நமது சகல மதங்களும் வறுமைப்பட்ட ஏழை மக்களுக்கு உதவுவதன் முக்கியத்துவத்தை நமக்கு எடுத்து இயம்புகின்றது.

அன்று சுனாமி ஆழிப் பேரலை தாக்கத்திற்குள்ளான மக்களுக்கு தென் பகுதியிலிருந்தும், வெளிநாட்டு நிறுவனங்கள் மூலமும் உதவிகள் கிடைத்து பாதிக்கப்பட்ட மக்கள் மீண்டெழுந்தனர். இதன் போது எவ்விதமாகவும் இன, மத பேதங்கள் காட்டப்படவில்லை. இலங்கையர் நாமென்ற அடிப்படையிலேயே இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

இந்த வகையில் இன்று நாட்டிலேற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக வறுமைக் கோட்டில் வாழும் மக்கள் அன்றாட வாழ்க்கையை முன்னெடுக்கப்படும் கஷ்ட நிலையுணர்ந்து நிந்தவூர் பொலிஸார் முன்னெடுத்துள்ள உதவித்திட்டம் வரவேற்புக்குரியதும் பாராட்டத்தக்கதுமாகும் -என்றார். (ஐ- 06)



# போதைப்பொருள் பாவனைக்கு எதிராக இளைஞர்கள் விழிப்புணர்வுப் பேரணி!






திருகோணமலை, ஜன. 02

கிண்ணியா பகுதியில் போதைப் பொருள் பாவனையை ஒழிக்க கோரி பேரணி ஊர்வலம் ஒன்று நேற்று நடைபெற்றது.

இந்தப் பேரணி குட்டிக்கராச்சி சந்தியில் இருந்து டி சந்தி வரை பேரணியாக சென்றது. இதன் போது, புஹாரி சந்தியில் கிண்ணியா அறபா மகா வித்தியாலய மாணவர்களால் போதை ஒழிப்பு வீதி நாடகமும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

“போதைப் பொருள் பாவனையற்ற சமுதாயத்தை உருவாக்க ஒன்றுபட வாருங்கள்” எனும் தொனிப்பொருளின் கீழ் இடம்பெற்ற விழிப்புணர்வு ஊர்வலத்தை கிண்ணியா டைட்டனிக் விளையாட்டு கழகம் மற்றும் மரத்தடி இதனை ஏற்பாடு செய்திருந்தனர்.

போதைப் பொருள் பாவனை அதிகரிப்பை ஒழிக்க இந்த விழிப்புணர்வு ஊருவலம் இடம் பெற்றது. இதில் நூற்றுக் கணக்கான இளைஞர்கள் கலந்து கொண்டனர். போதை ஒழிப்பு தொடர்பான பதாகைகளை ஏந்தியவாறு, அது தொடர்பான கோஷங்களை எழுப்பியவாறும் அவர்கள் சென்றனர்.

இதில் கிண்ணியா பிரதேச செயலாளர் எம். எச். ஹனி மற்றும் இளைஞர், யுவதிகள், சமூக ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# கல்முனை எல்லை நிர்ணயம் தொடர்பாக கலந்துரையாடல்!

கல்முனை பிரதேச எல்லை நிர்ணயம் மற்றும் எதிர்கால திட்ட முன்மொழிவுகள் தொடர்பான கலந்துரையாடல் கல்முனை பிரதேச செயலாளர் ஜே. லியாக்கத் அலியின் நெறிப்படுத்தலில் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி கேட்போர் கூடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் முன்னாள் இராஜாங்க அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச். எம். எம். ஹரீஸ் கலந்து கொண்டு கல்முனை பிராந்திய விடயங்கள், அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் நடைமுறை கள், கொள்கை பிரகடனங்கள், கல்முனையின் எதிர்கால நடவடிக்கைகள், வட்டார பிரிப்புக்கள் தொடர்பில் கருத்து வெளியிட் டார்.

மேலும் இந்நிகழ்வில் கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். றக்கீப், கல்முனை நாகூர் ஆண்டகை தர்ஹா ஷரீப் மற்றும் கல்முனை முஹையத்தீன் ஜும்மா பெரியபள்ளிவாசலின் தலைவர் டாக்டர் எஸ்.எம்.ஏ. அஸீஸ், கல்முனையான்ஸ் போரம் அமைப்பின் பிரதிநிதிகளான இப்திகார் நிசாத் செரீப், எம். முபாறிஸ், கல்முனை மறுமலர்ச்சி மன்ற தலைவர் எம்.எம். நஸீர் ஹாஜி போன்ற பலரும் கல்முனை பிரதேச பிரச்னைகள், தேவைகள், முரண்பாடுகளும் தீர்வுகளும் தொடர்பில் கருத்துரைத்தனர்.

இந்நிகழ்வில் உலமாக்கள், கல்முனை மாநகர சபை உறுப்பினர்களான ஏ.சி.ஏ.சத்தார், எம்.எஸ். எம். நிஸார், சட்டத்தரணி ஆரிகா காரியப்பர், சட்டத்தரணி ரோஷன் அக்தர், ஏ. ஹலீலுர்ரஹ்மான், முன்னாள் உறுப்பினர்களான எம். எச்.எம்.ஏ. மனாப், ஏ.எம். நியாஸ், கல்முனை பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜவ்பர், கல்முனை பிரதேச செயலக மற்றும் கல்முனை மாநகர சபை உயர் அதிகாரிகள், பிரதேச பாடசாலைகளின் அதிபர், பிரதிய திபர், ஆசிரியர்கள், கல்விமான்கள், பிரதேச முக்கிய சிவில் அமைப்புக்கள், விளையாட்டு கழகங்கள், இளைஞர் மற்றும் சமூக சேவை அமைப்புக்களின் பிரதானிகள், பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் எனபலரும் கலந்து கொண்டிருந்தனர். (ஐ-01)

## யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழப்பு!

திருகோணமலை, ஜன. 02

திருகோணமலை - புலிக்கண்டிகுளம் பகுதியில் யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழந்தார்.

வீட்டு வளவில் நுழைந்த யானையை விரட்ட முற்பட்ட போதே அவர் யானை தாக்கி உயிரிழந்தார்.

இதேவேளை மயிலவெள பகுதியில் வீதியால் பயணித்துக் கொண்டிருந்தவரை யானை தாக்கியதில், அவர் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக திருகோணமலை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

# குடும்பிமலை பாலம் உடைப்பு; போக்குவரத்து தடைப்பட்டது!

மட்டக்களப்பு, ஜன. 02

மட்டக்களப்பு கிரான் - குடும்பிமலை பிரதான போக்குவரத்து வீதியில் அமைந்துள்ள பாலமானது வெள்ள நீர் பெருகி உடைப்பெடுத்ததால் கடந்த வியாழக்கிழமை முதல் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

இதனால் அரச உத்தியோகத்தர்கள்,விவசாயிகள்,கால் நடை பராமரிப்போர்,பொதுமக்கள் என பலரும் போக்குவரத்து துண்டிப்பு



காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மாவட்டத்தில் பெய்த அடை மழை காரணமாக வெள்ள நீர் நிரம்பி காணப்பட்டதனால் குறித்த பாலத்தை உடைத்து நீர் வழிந்தோடுகிறது. வாகன போக்குவரத்தற்ற நிலையில் தோணி மூலம் சிலர் தங்களது போக்குவரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

சுமார் 18000 ஏக்கர் நிலப் பரப்பில் விவசாயத்தில் ஈடுபடுவோர் கால் நடை வளர்ப்போர் மற்றும் 18 கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள் என பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை பிரதேச செயலகம் சுகாதார திணைக்களம் பாடசாலைகள், நெல் சந்தைப்படுத்தல் சபை கால் நடை திணைக்களம் போன்ற அரச திணைக்களங்களின் நிர்வாக நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. அடைந்துள்ளன. (ஐ)

# 2023 புதுவருடத்தை உலகம் உற்சாகமாக வரவேற்றது!

லண்டன், ஜன. 02

2023ஆம் ஆண்டு புதுவரு டத்தை நேற்று உலகம் முழுவதும் வரவேற்றுக் கொண்டாடியது.

புதுவருடத்தை முதன்முதலாக பசுபிக் நாடான கிரிபாட்டி வரவேற்றது. அதைத் தொடர்ந்து ஒரு மணிநேரம் கழித்து நியூசிலாந்து கொண்டாடியது.

புதுவருடத்தை ஒட்டி உலக நாடுகளில் வான வேடிக்கையுடனான நிகழ் வுகளை முன்னெடுத்திருந்தனர். ஒவ் வொரு நகரங்களிலும் பல்லாயிரக் கணக்கான மக்கள் இந்த நிகழ்வுகளை கண்டு களித்தனர். (ஐ)



லண்டன் தேம்ஸ் நதியில்...



உக்ரைனின் கீவில் ஊரடங்குக்கு முன்பாக....



டுபாயின் புர்கலிபா கட்டடத்தில்...!



சீனாவின் - ஹொங்கொங்கில்....



அவுஸ்திரேலியாவின் சிட்னியில்...



எகிப்தின் நைல்நதியில்...

## புத்தாண்டிலும் வடகொரியா 3 ஏவுகணைகளை சோதித்தது!


பியோங்யாங், ஜன. 02

தொடர்ந்து ஏவுகணை சோதனைகளை முன்னெடுத்துவரும் வடகொரியா புத்தாண்டு நாளிலும் ஏவுகணைச் சோதனையில் ஈடுபட்டுள்ளது.

ஐ. நாவின் தடையையும் மீறி மூன்று ஏவுகணைகளை அந்த நாடு செய்துள்ளது. இந்த ஏவுகணை சோதனைக்குப் பிறகு நடைபெற்ற முக்கிய ஆலோசனை கூட்டத்தில் வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் பங்கேற்றார்.

இந்தக் கூட்டத்துக்குப் பிறகு வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்,

"அணு ஆயுத உற்பத்தியை வேகமாக வடகொரியா அதிகரிக்கப்படவுள்ளது. அமெரிக்கா மற்றும் பிற பகைமை நாடுகளின் ஆபத்தான போக்குக்கு பதிலடி கொடுக்கும் வகையிலும்




வடகொரியாவின் நலனை பாதுகாக்கும் நோக்கிலும் நாட்டின் இராணுவப் பலம் இரு மடங்காக்கப்படும்", என்று அவர் கூறியுள்ளார். (ஐ)

## பலஸ்தீனர்களின் உரிமைகள் மீறல் ஐ. நாவில் தீர்மானம் நிறைவேற்றம்!

நியூயோர்க், ஜன. 02

பலஸ்தீன நிலப் பகுதியை இஸ்ரேல் நீண்ட காலமாக ஆக்கிரமித்திருப்பது மற்றும் இணைத்திருப்பதன் சட்ட ரீதியான விளைவுகள் குறித்து சர்வதேச நீதிமன்றத்தின் கருத்தைக் கோரும் தீர்மானம் ஐ. நா. பொதுச் சபையில் கொண்டு வரப்பட்டது.



கிழக்கு ஜெருசலேம் உட்பட ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீன பகுதியில் உள்ள பலஸ்தீனர்களின் உரிமைகளை பாதிக்கும் இஸ்ரேலிய நடைமுறைகள் குறித்த இந்த வரைவு தீர்மானம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற வாக்கெடுப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

தீர்மானத்துக்கு ஆதரவாக 87 நாடுகள் வாக்களித்தன. இஸ்ரேல், அமெரிக்கா உள்ளிட்ட 26 இதற்கு எதிராக வாக்களித்தன. இந்தியா, ஜப்பான் உள்ளிட்ட 53 நாடுகள்வாக்கெடுப்பில் பங்கேற்காமல் புறக்கணித்தன.

பலஸ்தீன பகுதியை கடந்த 1967ஆம் ஆண்டு முதல் இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ளது. ஐ. நாவுக்கான இஸ்ரேல் தூதர் கிலாட் எர்டன் பேசுகையில், "சொந்த நாட்டில் வசிக்கும் யூத மக்களை ஆக்கிரமிப்பாளர்கள் என்று எந்தவொரு சர்வதேச அமைப்பும் முடிவு செய்ய முடியாது" என்றார்.

## கொரோனா பாதிப்பு தரவுகளை சீனா உடன் வெளியிடவேண்டும்!

### உலக சுகாதார அமைப்பு வலியுறுத்து

ஜெனிவா, ஜன. 02

சீனாவின் கொரோனா பாதிப்பு நிலவரத்தை அந்த நாட்டு அரசாங்கம் உடனுக்குடன் வெளியிட வேண்டும் என்று உலக சுகாதார அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

சீனாவில் அண்மைக் காலமாக கொரோனா பரவல் தீவிரமடைந்துள்ளது குறித்து ஆலோசிப்பதற்காக, அந்த நாட்டு அதிகாரிகளுக்கும் உலக சுகாதார அமைப்பு நிபுணர்களுக்கும் இடையிலான கூட்டம் நடைபெற்றது.

அப்போது, அந்த நோய்த்தொற்று பரவல் நிலவரம் குறித்த விவரங்களை உடனுக்குடன் எங்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று சீன அதிகாரிகளிடம் வலியுறுத்தினோம்.

அந்த நாட்டில் தினசரி எத்தனை பேருக்கு கொரோனா உறுதி செய்யப்படுகிறது, அவர்களுக்கு ஏற்பட்டுள்ள கொரோனா தொற்றின் ரகம் என்ன, கொரோனாவால் பாதிக்கப்பட்ட எத்தனை பேர் மருத்துவமனைகளில் அனுமதிக்க வேண்டிய அளவுக்கு உடல்நிலை மோசமடைகிறது, அவர்களில் எத்தனை பேர் கொரோனாவுக்கு பலியாகி வருகின்றனர் என்பன போன்ற விவரங்களை உடனுக்குடன் வெளியிட வேண்டும் என்று சீன அதிகாரிகளிடம் வலியுறுத்தப்பட்டது.

பொதுமக்களுக்கு, குறிப்பாக கொரோனா மரண அபாயம் அதிகம் கொண்ட, 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு செலுத்தப்பட்டு வரும் தடுப்பூசி குறித்த விவரங்களையும் தெரியப்படுத்த வேண்டும் என்று சீன அதிகாரிகளிடம் கேட்டுள்ளோம்.

சீனாவில் நோய் பரவலைக் கட்டுப்படுத்துவது, பரவி வரும் தீநுண்மியின் வகைகள் மற்றும் துணை ரகங்களைக் கண்காணிப்பது, தடுப்பூசி திட்டத்தைச் செயல்படுத்துவது, கொரோனா நோயாளிகளுக்கு மருத்துவ சேவை அளிப்பது, இந்த விவகாரத்தில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது போன்ற நடவடிக்கைகளில் தங்களது செயல்பாடுகள் குறித்து அந்த ஆலோசனைக் கூட்டத்தில் உலக சுகாதார அமைப்பிடம் சீன பிரதிநிதிகள் விளக்கமளித்தனர்.

பரவி வரும் கொரோனா ரகங்களின் உருமாற்றத்தை தொடர்ந்து கண்காணிப்பதிலும், மருத்துவ சேவை மேலாண்மையிலும் சீன அதிகாரிகள் தங்களது திறனை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று உலக சுகாதார அமைப்பு அப்போது வலியுறுத்தியது.

மேலும், இதுபோன்ற விவகாரங்களில் சீன நிபுணர்களுடன் இணைந்து செயல்பட உலக சுகாதார அமைப்பு தயாராக இருப்பதாக ஆலோசனைக் கூட்டத்தில் உறுதியளிக்கப்பட்டது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, சீனாவிலிருந்து தங்கள் நாட்டுக்கு வரும் பயணிகளுக்கு எதிரான கட்டுப்பாடுகளை கடுமையாக்கியுள்ள இந்தியா உள்ளிட்ட நாடுகளுடன் மேலும் பல ஐரோப்பிய நாடுகள் இணைந்துள்ளன. (ஐ)

# ரூ. 7,350 கோடிக்கு ரொனால்டோவை ஒப்பந்தம் செய்தது சவூதி கழகம்!




ரியாத், ஜன. 02

போர்த்துக்கல் உதைபந்தாட்ட அணியின் நட்சத்திர வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோவை 20 கோடி டொலர்களுக்கு - நம் நாட்டு மதிப்பில் சுமார் 7 ஆயிரத்து 350 கோடி ரூபாய்க்கு ஒப்பந்தம் செய்துள் ளது சவூதி அரேபியாவின் அல் நசர் கழகம். 37 வயதான ரொனால்டோ இந்த கழகத்துக்காக 2025ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

இதுதொடர்பாக ரொனால்டோ கூறும்போது, "சவூதி அரேபியாவில் புதிய உதைபந்தாட்ட லீக்கில் விளையாட உள்ளேன். அல் நசர் கழகத்தின் தொலை நோக்கு பார்வையும், செயலும் மிகுந்த ஊக்கம் அளிக்கி றது. இந்தக் கழகத்தில் இணைவதில் மகிழ்ச்சி அடைகி றேன். அணி மிகப்பெரிய வெற்றியை அடைய உதவ முடியும்" என்றார்.

அல் நசர் கழகம் சவூதி அரேபியன் லீக் பட்டத்தை 9 முறை வென்றுள்ளது. கடைசியாக அந்த அணி 2019ஆம் ஆண்டு கிண்ணத்தை வென்றிருந்தது.

அல் நசர் கழகம் வெளியிட்டுள்ள ருவிற்றர் பிதிவில், "உதைபந்தாட்ட உலகில் இந்த ஒப்பந்தம் வரலாற்றை உருவாக்கும். மேலும் இந்த ஒப்பந்தம் எங்களது கழகத்தை இன்னும் பெரிய வெற்றியை அடைய ஊக்கு விப்பது மட்டும் அல்லாமல் எங்கள் லீக், எங்கள் நாடு, எங்கள் எதிர்கால தலைமுறையினர் சாதிப்பதற்கான உந்து சக்தியை தரும். கிறிஸ்ரியானோ ரொனால் டோவை எங்கள் கழகத்துக்கு வரவேற்கிறோம்" எனத் தெரிவித்துள்ளது. கிறிஸ்டியானோ ரொனால்டோ கடைசியாக இங்கி லாந்தில் உள்ள மான்செஸ்டர் யுனைட்டெடு கிளப்பில் விளையாடி வந்தார். அணி நிர்வாகம், பயிற்சியாளரு டன் ஏற்பட்ட மோதல் காரணமாக அந்த கிளப்பில் இருந்து விலகியிருந்தார்.

5-வது முறையாக உலகக் கோப்பை கால்பந்து தொடரில் ரொனால்டோ பங்கேற்ற போதிலும் அணிக் காக கோப்பையை வென்று கொடுக்க முடியாமல் போனது. இம்முறை அவர், கால் இறுதிக்கு முந்தைய சுற்றிலும், கால் இறுதி ஆட்டத்திலும் மாற்று வீரராக களமிறக்கப்பட்டார். இதனால் அவர், கடும் அதிருப்தி யில் இருந்தார். இதே நிலைதான் அவருக்கு மான் செஸ்டர் அணியிலும் இருந்தது.

ஐரோப்பிய லீக் போட்டிகளில் வெகுகாலம் ஆதிக் கம் செலுத்திய ரொனால்டா தற்போது முதன்முறையாக ஆசிய கிளப்பில் இணைந்துள்ளார். 2003 முதல் 2009-ம் ஆண்டு வரை மான்செஸ்டர் யுனைட்டெடு அணியிலும் 2009 முதல் 2018-ம் ஆண்டு வரை ரியல்மாட்ரீட் அணியிலும் 2018 முதல்2021 வரை ஜூவென்டஸ் அணியிலும் விளையாடியிருந்தார் ரொனால்டா. இதன் பின்னர் 2021ஆம் ஆண்டு மீண்டும் மான்செஸ்டர் யுனைட்டெடு அணிக்கு திரும்பினார். ஆனால் அங்கு ஏற்பட்ட மனக்கசப்பு காரணமாக வெளியேறி தற்போது அல் நசர் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

ரொனால்டோ நீண்ட காலமாகவே கால்பந்து உலகில் அதிக சம்பளம் வாங்கும் வீரர்களில் ஒருவராக இருந்து வருகிறார். மான்செஸ்டர் அணியுடன் அவருக்கு மோதல் ஏற்பட்டதை தொடர்ந்து செல்சியா, பேயர்ன் முனிச், நபோலி அணிகளுடன் ரொனால்டோ தொடர்பில் இருந்தார். இதனால் இந்த அணிகளில் ஏதேனும் ஒன்றில் அவர், இணையக்கூடும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் பெரும் தொகைக்கு சவூதி அரேபியாவின்அல் நசர் கிளப்பில் தற்போது இணைந்துள்ளார். (ஐ)

# அணி வீரர்களின் கோல்களின்றி 2 கோல்களடித்து லிவர்பூல் வெற்றி!



லண்டன், ஜன. 02

இங்கிலாந்தில் நடைபெறும் பிறீமியர் லீக் உதைபந் தாட்டப் போட்டியில் சனிக்கிழமை ஆட்டத்தில் லிவர் பூல் 2-1 என்ற கோல் கணக்கில் லெய்செஸ்டர் சிற்றியை வென்றது.

இந்த ஆட்டத்தில் லிவர்பூல் அணிக்கான 2 கோல்க ளுமே, லெய்சஸ்டர் வீரர் வௌட் பேஸ் தவறுதலாக அடித்த 'ஒன் கோல்' ஆகும்.

தற்போது புள்ளிகள் பட்டியலில் லிவர்பூல் அணி இத்துடன் 16 ஆட்டங்களில் 8-ஆவது வெற்றியை பதிவு செய்து 6-ஆவது இடத்தில் இருக்கிறது. லெய்செஸ்டர் சிற்றி 17 ஆட்டங்களில் 10ஆவது தோல்வியைப் பெற்று 13-ஆவது இடத்தில் உள்ளது.

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியை ஒட்டி நிறுத்தப்பட்டிருந்த ஐரோப்பிய உதைபந்தாட்ட லீக் போட்டிகள் தற்போது மீண்டும் தொடங்கி நடை பெற்று வருகின்றன. அந்த வகையில் இங்கிலாந்து பிறீமியர் லீக் உதைபந்தாட்டப் போட்டியின் ஆட்டங் கள் 2ஆவது வாரமாக நடைபெற்று வருகிறது.

இதில் லிவர்பூல் - லெய்செஸ்டர் அணிகள் மோதிய ஆட்டம் லிவர் பூல் நகரில் சனிக்கிழமை நடைபெற்றது. விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டம் தொடங்கிய சில நிமிஷங்களிலேயே கோலடித்தது லெய்செஸ்டர் சிற்றி. 4-ஆவது நிமிஷத்தில் லெய்செஸ்டர் கோல் காப் பாளர் உதைத்து பாதி மைதானம் கடந்து வந்த பந்தை அந்த அணியின் டாக்கா அப்படியே திருப்பி சக வீரர் கிர்னன் டியுஸ்பரியின் பாதையில் வழங்கினார். அதை அவர் இலாவகமாக கடத்திச் சென்று லிவர்பூல் கோல் காப்பாளரை கடந்து கோல் அடிக்க முயன்றார். இதனால் ஆரம்பத்திலேயே முன்னிலை பெற் றது லெய்செஸ்டர். ஆனால், அந்த அணிக்கான பின்ன டைவை அதன் வீரர் வௌட் பேஸே ஏற்படுத்தினார்.

38ஆவது நிமிடத்தில் லிவர்பூல் வீரர் அர்னால்ட் கோல் கம்பத்தின் வலது பக்கத்திலிருந்து பந்தை தட்டிக் கொடுத்தார். அந்தப் பந்தை பெறுவதற்கு இடது பக்கத்தில் கூட லிவர்பூல் வீரர்கள் இல்லை. ஆனால், அது அவ்வாறு சென்றுவிடக் கூடாது எனக் கருதி அதைத் தடுப்பதற்காக லெய்செஸ்டர் வீரர் வௌட் வேகமாக குறுக்கே புகுந்து பந்தை தடுக்க முயன்றார். அது அவரின் காலில் பட்டு மேலெழும்பி லெய்செஸ்டர் கோல் காப்பாளரையும் கடந்து சென்று யாரும் எதிர்பாராத வகையில் கோலானது.

அவரே மீண்டும் ஒருமுறை இதே 'ஒன் கோல்' தவறை 45-ஆவது நிமிடத்தில் செய்து லிவர்பூல் அணிக்கு முன்னிலையை வழங்கினார். லிவர்பூல் வீரர் நுனெஸ் கோல் கம்பத்தை நோக்கி உதைத்த பந்து கம்பத்தில் பட் டுத் திரும்பியது. அந்த நேரத்தில் பந்தை தடுப்பதற்காக வேகமாக வந்த வௌட் தன்னை கட்டுப்படுத்த முடி யாமல் போக, திரும்பி வந்த பந்தை அவரே கோல் கம்பத்துக்குள் உதைத்தார்.

இதனால் முதல் பாதி முடிவிலேயே லிவர்பூல் 2-1 என முன்னிலை பெற்றது. பிற்பாதியில் கடினமாக முயற்சித்தும் லெய்செஸ்டருக்கு கோல் வாய்ப்பு கிடைக்காமல் போக, லிவர்பூல் வென்றது. (ஐ)




# இந்தியாவுடனான தொடர் கடும் சவாலாக இருக்கும்!

சிட்னி, ஜன. 02

பெப்ரவரியில் இந்தியா வரும் அவுஸ்திரேலிய அணி 4 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் விளை யாடவுள்ளது.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியா வில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகி றது. முதல் மற்றும் 2-வது டெஸ்ட் போட்டிகளில் வெற்றிபெற்று 3 போட்டிகள் கொண்ட தொடரை அவுஸ்திரேலிய அணி கைப்பற்றியுள்ளது.

இதையடுத்து 3ஆவது டெஸ்ட் போட்டி நாளை மறு தினம் தொடங்கவுள்ளது. இதன்பின்னர் 3 போட்டி களைக் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடர் நடை பெறவுள்ளது. 2ஆவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்தி ரேலிய அணியின் டேவிட் வோர்ணர் இரட்டை சதம் அடித்து அணியின் வெற்றிக்கு முக்கிய காரணமாக அமைந்தார்.

நீண்ட நாட்களாக தடுமாறி வந்த அவர், மீண்டும் வழமைக்கு திரும்பியிருப்பதால், அவுஸ்திரேலிய அணி யின் ரசிகர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். பெப்ரவரி யில் இந்தியா வரும் அவுஸ்திரேலிய அணி 4 போட்டி களைக் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள் ளது.

இந்நிலையில் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் கிரிக் கெட் தொடரையும் கைப்பற்றுவோம் என டேவிட் வோர்ணர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் அளித்துள்ள பேட்டியில் கூறியிருப்பதாவது:-

இந்தியாவில் நாக்பூர், டில்லி, தர்மசாலா மைதானங் கள் ஒவ்வொன்றும் வித்தியாசமானவை. இந்த மைதா னங்களில் நாங்கள் ஏற்கனவே விளையாடி இருக்கி றோம். இந்தியாவுக்கு எதிரான கிரிக்கெட் தொடர் மிகுந்த சவாலாக இருக்கும். இருப்பினும் இந்த தொடரை நாங்கள் போராடி வெல்வோம். தற்போது துடுப்பாட்டம், பந்துவீச்சு என அனைத்திலும் அவுஸ் திரேலிய அணி நல்ல தரத்தில் உள்ளது. நதன் லயன் போன்ற உலகத்தரம் வாய்ந்த சுழல்பந்து வீச்சாளர்கள் எங்களிடம் உள்ளனர் - என்றார். (ஐ)

# யுனைடெட் கிண்ண ரென்னிஸ் ரபேல் நடால் அதிர்ச்சி தோல்வி!



சிட்னி, ஜன. 02

அவுதிரேலியாவில் நடைபெறும் யுனைடெட் கிண் ணத்துக்கான கலப்பு ரென்னிஸ் போட்டியில் ஸ்பெயின் நட்சத்திரமான ரபேல் நடால் - இங்கிலாந்து இளம் வீரர் கமரூன் நோரியிடம் அதிர்ச்சித் தோல்வி கண்டார்.

நடாலை இத்துடன் 4ஆவது முறையாகச் சந்தித்த நோரி, அதில் முதல் வெற்றியைப் பதிவு செய்தி ருக்கிறார்.

ஸ்பெயின் - இங்கிலாந்து (0-2) இந்த இரு அணிகளி டையேயான மோதலில் ஆடவர் பிரிவில் நடால் 6-3, 3-6, 4-6 என்ற செற்களில் நோரியிடம் வீழ்ந்தார்.

மகளிர் பிரிவிலும் இங்கிலாந்தின் கேட்டி ஸ்வான் 3-6, 6-1, 6-2 என்ற செற்களில் ஸ்பெயினின் நூரியா பரிஸாஸ் டியாஸை வீழ்த்தினார்.

போலந்து - கஜகஸ்தான் (1-1): ஆடவர் பிரிவில் கஜகஸ்தானின் டிமோஃபே கடோவ் 7-6, 6-2 என்ற செற்களில் போலந்தின் டேனியல் மிகால்ஸ்கியை வெல்ல, மகளிர் பிரிவில் போலந்தின் இகா ஸ்வியாடெக் 6-1, 6-3 என கஜகஸ்தானின் யுலியா புடின்சேவாவை தோற்கடித்தார்.

## காணி தகராறால் பெண் படுகொலை!

கொழும்பு, ஜன. 02

காணி தொடர்பில் ஏற்பட்ட தகராறில் பெண் ஒருவர் மண்வெட்டியால் தாக்கப்பட்டு உயிரிழந்தார்.

அநுராதபுரம் - மஹாவிலாச்சி - ஹலம்ப கஸ்வெவ பிரதேசத்தை சேர்ந்த 76 வயது பெண்ணே இவ்வாறு கொல்லப்பட்டார்.

கொலையுடன் தொடர்புடைய 52 வயதுடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் நேற்றுமுன்தினம் அநுராதபுரம் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார். அவரை வரும்10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மஹாவிலாச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## ஒவ்வொரு வருடமும் 40 ஆயிரம்பேர் போதைக்கு அடிமையாகின்றனர்!

### தேசிய ஆபத்தான மருந்து கட்டுப்பாட்டு சபை

**கொழும்பு, ஜன.02**

**ஒவ்வொரு வருடமும் சுமார் 40 ஆயிரம் பேர் புதிதாக சிகரெட்கள், மதுபானங்கள் மற்றும் போதைப்பொருளுக்கு அடியாகின்றனர் என்று தேசிய ஆபத்தான மருந்து கட்டுப்பாட்டு சபை தெரிவித்துள்ளது.**

இதேவேளை, நாட்டில் சுமார் ஒரு இலட்சத்து 20 பேர் ஹெரோயின் போதைப் பொருளை பயன்படுத்துகின்றனர். சுமார் 4 இலட்சம் பேர் கஞ்சா பயன்படுத்துகின்றனர் என்றும் அதன் தலைவர் ஷக்ய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

பொதுவாக, சிகரெட், மது அருந்துபவர்களின் எண்ணிக்கை குறைந்து வரும் அதேவேளையில், ஐஸ் உள்ளிட்ட போதைப் பொருட்களை பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அத்துடன், ஐஸ் ரக போதைப் பொருளைப் பயன்படுத்தும் 90 முதல் 100 பேர் மாத்திரமே 2022இல் சிகிச்சை பெற்றுள்ளனர்.

ஹெரோயின் பாவனையாளர்களில் பெரும்பாலானோர் சிகிச்சை பெறாமலேயே போதைப் பொருட்களை பயன்படுத்துவதை நிறுத்துகின்றனர். இதேநேரம், சிகிச்சை மையங்களில் சுமார் 3 ஆயிரம் பேருக்கு மாத்திரமே சிகிச்சை வசதிகள் உள்ளன.

இந்தநிலையில், ஒவ்வொரு வருடமும் சுமார் 40 ஆயிரம் பேர், புதிதாக சிகரெட்கள், மதுபானங்கள் மற்றும் போதைப்பொருள் பாவனையாளர்களாக பதிவாகி வருவதாக தேசிய ஆபத்தான மருந்து கட்டுப்பாட்டு சபை தலைவர் ஷக்யா நாணயக்கார குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## சாரதி, நடத்துநர்கள் இன்மையால் 800 பஸ்களை இயக்கமுடியாத நிலை!

### இலங்கை போக்குவரத்து சபை

கொழும்பு, ஜன. 02

சாரதி, நடத்துநர்களின் வெற்றிடங்களால் நாளாந்தம் 800 பஸ்களை சேவையில் ஈடுபடுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் லலித் டி அல்விஸ் தெரிவித்துள்ளார்.

இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சரவையின் ஒப்புதலின்பேரில் ஆட் சேர்ப்பு நடைபெறும் என்றும், அதற்கான ஒப்புதலுக்காக காத்திருப்பதாகவும் அவர் கூறினார். இதுவரையில் இலங்கை போக்குவ ரத்து சபைக்கு சொந்தமான சுமார் 1,200 பஸ்கள் மட்டுமே சேவையில் ஈடுபடுத்தப்ப டுகின்றன என்றும் அவர் கூறினார். (ஐ)

## பொலிஸாரை கண்டு தப்ப முயன்றவர் வீழ்ந்து மரணம்!

கொழும்பு, ஜன. 02

கம்பளை - பொத்தலப்பிட்டியில் உள்ள வீடு ஒன்றில் தங்கியிருந்த நீதிமன்றில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 22 வயதுடைய இளைஞர் ஒருவரைக் கைது செய்ய சென்றபோது அவர் மேல் மாடியிலிருந்து தவறி வீழ்ந்து உயிரிழந்தார் என்று கம்பளை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாரிடம் இருந்து தப்பிக்க முற்பட்டார் என்று கூறப்படும் குறித்த சந்தேகநபர் மேல் மாடியில் இருந்து தவறி வீழ்ந்து ஆபத்தான நிலையில் காணப்பட்டார்.

இதனையடுத்து பொலிஸார் உடனடியாக அவரை கம்பளை மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாகவும் அங்கு அவர் உயிரிழந்தார் என்றும் கம்பளை தலைமையக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ)

## 16,692,398 பேர் வாக்காளர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளார்கள்!

கொழும்பு, ஜன. 02

2022 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலின் அடிப்படையில் ஒரு கோடியே 66 இலட்சத்து 92ஆயிரத்து 398 பேர் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

நாட்டில் விரைவில் (2023 மார்ச் 20 இற்கு முன்னர்) உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், இந்த வாக்காளர் பட்டியலே பயன்படுத்தப்படவுள்ளது.

இதன்படி, அதிக வாக்காளர்களை கொண்ட மாவட்டமாக கம்பஹா உள்ளது. அங்கு, 18 இலட்சத்து 24 ஆயிரத்து 742 பேர் வாக்காளர்களாக உள்ளனர். அடுத்த இடத்தில், கொழும்பு 17 இலட்சத்து 43 ஆயிரத்து 542 பேர் வாக்காளர்களாக உள்ளனர்.

வடக்கு மாகாணத்தில், யாழ்ப்பாணத்தில் 5 இலட்சத்து 77 ஆயிரத்து 718 பேரும், கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பில் 4 இலட்சத்து 33 ஆயிரத்து 346 பேரும் வாக்காளர்களாக பதிவு செய்துள்ளனர்.

ஏனைய மாவட்டங்களில், வன்னி - 2 இலட்சத்து 98 ஆயிரத்து 15,

அம்பாறை - 5 இலட்சத்து 34 ஆயிரத்து145

திருகோணமலை - 3 இலட்சத்து ஆயிரத்து 908, காலி - 8 இலட்சத்து 84 ஆயிரத்து 28

மாத்தறை - 6 இலட்சத்து 72 ஆயிரத்து 218, அம்பாந்தோட்டை - 5 இலட்சத்து 6 ஆயிரத்து 368, குருநாகல் - 13 இலட்சத்து 85ஆயிரத்து 703

புத்தளம் - 6 இலட்சத்து 43 ஆயிரத்து 279, அநுராதபுரம் - 7 இலட்சத்து 17 ஆயிரத்து 482, பொலநறுவை - 3 இலட்சத்து 42 ஆயிரத்து 31, பதுளை - 6 இலட்சத்து 84 ஆயிரத்து 521,

மொனராகலை - 3 இலட்சத்து 84 ஆயிரத்து 888, இரத்தினபுரி - 9 இலட்சத்து 2 ஆயிரத்து 996

கேகாலை - 6 இலட்சத்து 96 ஆயிரத்து 269, கண்டி - 11 இலட்சத்து 59 ஆயிரத்து 147, மாத்தளை - 4 இலட்சத்து 18 ஆயிரத்து 929, களுத்துறை 9 இலட்சத்து 92 ஆயிரத்து 273, நுவரெலியா - 5 இலட்சத்து 88 ஆயிரத்து 850 பேரும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயரும் உள்ளதா என்பதை இந்த https://eservices.elections.gov.lk/pages/myVoterRegistration.aspx தளத்துக்கு சென்று பார்வையிட முடியும். (ஐ)

## 500 ஊழியர்கள் ஓய்வு; 44 ரயில் சேவை இரத்து

கொழும்பு, ஜன. 02

புகையிரதத் திணைக்களத்தைச் சேர்ந்த சுமார் 500 ஊழியர்கள் ஓய்வு பெற்றுள்ளதால் 44 ரயில் பயணங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு ஓய்வுபெற்ற ஊழியர்களில் பெரும்பாலானோர் ரயில்களை இயக்குவதில் நேரடியாக தொடர்புடையவர்களாவர்.

நேற்றையதினம் கரையோரப் பாதையில் 12 ரயில் சேவைகளும், பிரதான பாதையில் 23 ரயில் சேவைகளும் புத்தளம் பாதையில் 7 ரயில் சேவைகளும் களனி வெளிப் பாதையில் 2 ரயில் சேவைகளும் இரத்துச் செய்யப்பட்டன.

அத்தியாவசிய ஊழியர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியை தொடரச் செய்யுமாறு புகையிரதக் கட்டுப்பாட்டு அதிகார சபைக்கு வாய்மொழியாக அறிவுறுத்தப்பட்ட போதிலும் கடந்த 2 வருடங்களாக ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட வில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய அனுமதிக்கப்படும் வரை ஓய்வுபெற்ற எந்த ஊழியரும் பணிக்கு வரமாட்டார்கள் என ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.(ஐ)

## மரண ஊர்வலத்தில் ஓட்டோ புகுந்ததில் ஏழு பேர் காயம்!

கொழும்பு, ஜன. 02

மரண ஊர்வலம் ஒன்றில் ஓட்டோ புகுந்து ஏற்படுத்திய விபத்தில் மூன்று சிறுவர்கள் உட்பட 7 பேர் படுகாயமடைந்தனர்.

களுத்துறை - பாணந்துறை - வாதுவையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பெண் ஒருவரின் சடலத்தை மயானத்துக்கு எடுத்துச் சென்றபோது பின்னால் வேகமாக வந்த ஓட்டோ மரண ஊர்வலத்தில் புகுந்து விபத்தை ஏற்படுத்தியது.

இதில் 3 சிறுவர்கள் உட்பட ஏழு பேர் காயங்களுக்கு உள்ளாகினர். காயமடைந்தவர்கள் பாணந்துறை மற்றும் களுத்துறை மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். களுத்துறை பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

## தேயிலை, இறப்பர் உற்பத்தி 2022 ஆம் ஆண்டில் வீழ்ச்சி!

கொழும்பு, ஜன. 02

நாட்டின் தேயிலை மற்றும் இறப்பர் உற்பத்தியில் பெரும்பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



2022ஆம் ஆண்டின் முதல் 10 மாதங்களில் தேயிலை மற்றும் இறப்பர் உற்பத்தி குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியை பதிவு செய்துள்ளன.

இதன்படி, கடந்த 2021ஆம் ஆண்டில் முதல் 10 மாதங்களில் மொத்த தேயிலை உற்பத்தி 258.9 மில்லியன் கிலோகிராம் எனவும், 2022ஆம் ஆண்டில் முதல் 10 மாதங்களில் மொத்த தேயிலை உற்பத்தி 211.1 மில்லியன் கிலோகிராம் ஆகும்.

இந்நிலையில், கடந்த 2021ஆம் ஆண்டில் முதல் 10 மாதங்களில் மொத்த இறப்பர் உற்பத்தி 66.3 மில்லியன் கிலோகிராம் 2022இன் முதல் 10 மாதங்களில் மொத்த இறப்பர் உற்பத்தி 59.2 மில்லியன் கிலோகிராம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, கடந்த 2021ம் ஆண்டில்மொத்த தேங்காய் உற்பத்தி 2577.2 மில்லியன்களாகவும், 2022ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் தேங்காய் உற்பத்தி 2850 மில்லியன் என வளர்ச்சியையும் பதிவு செய்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## மின்சார...

நேற்று தெரிவித்தார்.

மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்கும் முறை சட்டத்தில் தனித் தனியாகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளதாகத் தெரிவித்த ரத்நாயக்க, மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கான யோசனை மின்சார சபையிடமிருந்து கிடைக்கப் பெற்றால் மாத்திரமே அதனை முன்னெடுக்க நம்புவதாகவும் குறிப்பிட்டார்.

மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கான பிரேரணை இன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகத் தமக்கு தகவல் கிடைத்துள்ளதாகத் தெரிவித்த ரத்நாயக்க, எவ்வாறாயினும், நாட்டில் தற்போது நிலவும் சூழ்நிலை காரணமாக மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவதற்கு தற்போதைக்கு வாய்ப்பு இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

## தமிழரின்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகவே உள்ளூராட்சித் தேர்தலை எதிர்கொள்வதென கட்சியின் அரசியல் செயற்குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இது தமிழ் தரப்பின் ஒற்றுமைக்கு எதிரான தரப்பின் பிரசாரம் என பலரும் சுட்டிக்காட்டப்பட்டு வந்த நிலையில், அதை உறுதி செய்யும் விதமாக, கூட்டத்தில் பேசப்பட்ட விவரங்கள் குறித்து தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா வெளிப்படுத்தியுள்ளார்.

தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுவிலும், பின்னர் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர்களின் கூட்டத்திலுமே இறுதி முடிவெடுக்கப்படும் எனவும் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள கட்சிகளை இணைத்து, உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் யோசனை தொடர்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சித் தலைவர்கள் அனைவரும் இணைந்து இறுதித் தீர்மானத்தை எடுப்பார்கள் எனவும் அவர் கூறினார். (அ)

## அனைவரும்...

அறிவிப்பேன். இதை மட்டுமே என்னால் இப்போது கூற முடியும்."

- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அரசு ஆரம்பித்துள்ள சர்வகட்சி பேச்சு தொடர்பிலும், எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பிலும் ஜனாதிபதியிடம் கொழும்பு ஊடகம் ஒன்று எழுப்பிய பிரத்தியேக கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் இடம்பெறுகின்ற கொலைச் சம்பவங்கள், போதைப் பொருள் கடத்தல் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளைத் தப்பிக்கவைக்கும் வகையில் குறிப்பிட்ட சில ஊடகங்களில் திரிபுபடுத்தப்பட்ட செய்திகள் வருவதுபோல், அரசு ஆரம்பித்துள்ள அரசியல் தீர்வைக் காண்பதற்கான சர்வகட்சி பேச்சு தொடர்பிலும் முரண்பட்ட தகவல்களை சில ஊடகங்கள் வெளியிடுகின்றன.

நாட்டு மக்களுடைய பிரச்னைகளுக்கு தீர்வை காணும் பயணத்தில் இப்படியான ஆரோக்கியமற்ற செயல்களில் ஈடுபட வேண்டாம் எனக் குறிப்பிட்ட ஊடகங்களிடம் நான் வேண்டிக்கொள்கின்றேன்.

நாட்டு மக்களில் எந்தவொரு தரப்புக்கும் பாதகமில்லாத வகையில் அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு நிரந்தர அரசியல் தீர்வைக் காண்பதுதான் எனது இலக்கு. இதை மட்டுமே என்னால் இப்போது கூற முடியும்.

அதிகாரப் பகிர்வு தொடர்பாக சர்வகட்சித் தலைவர்கள் தங்களுக்கு இடையில் ஒன்றுகூடி ஒரு தீர்க்கமான முடிவை விரைந்து எடுக்குமாறு கடந்த சந்திப்பில் கூறிவிட்டேன்-என்றார். (அ)

# உரிய அனுமதி இன்றி மருந்து இறக்குமதி செய்வதற்கு எதிர்ப்பு

கொழும்பு, ஜன. 02

அதிகளவிலான மருந்து வகைகளை இந்தியாவை சேர்ந்த இரண்டு தயாரிப்பாளர்களிடம் இருந்து கொள்வனவு செய்யும் சரச்சைக்குரிய நடவடிக்கை தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டும் என இலங்கை ஔடதங்கள் தயாரிப்பாளர்கள் சபை தெரிவித்துள்ளது.

தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு இலங்கை ஔடதங்கள் தயாரிப்பாளர்கள் சபை அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் பல்வேறு பிரச்னைகள் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

புதிதாக கொள்வனவு செய்யப்படவுள்ள மருந்து வகைகள் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவு செய்யப்படாதவை என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு இறக்குமதி செய்து பயன்படுத்த வேண்டிய மருந்து வகைகள் என்னவென்பதை தீர்மானிக்கும் அதிகாரம் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவிற்கே உள்ளது.

இந்த மருந்து வகைகளை தயாரிப்பது தொடர்பில் சுகாதார அமைச்சர் தனிப்பட்ட ரீதியில் இந்தியாவிற்கு சென்று உடன்படிக்கைகளையும் ஏற்படுத்திக்கொண்டுள்ளதாக இலங்கை ஔடதங்கள் தயாரிப்பாளர்கள் சபை அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தகையை செயற்பாடுகள் அபாயகரமான முன்னுதாரணத்தை வழங்குவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய நடவடிக்கைகள் 2015 ஆம் ஆண்டின் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் சட்டத்திற்கு அமைவானதா எனவும் அந்த கடிதத்தில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

ஊடகங்கள் இது தொடர்பில் வெளியிட்டுள்ள தகவல்கள் தொடர்பில் தெளிவுபடுத்தல் ஒன்று அவசியம் என இலங்கை ஔடதங்கள் தயாரிப்பாளர்கள் சபை தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையின் பிரதம நிறைவேற்றுஅதிகாரிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் வலியுறுத்தியுள்ளது.

அந்த அறிக்கைகள் உண்மையாக இருப்பின், அதற்கு தமது அமைப்பு எதிர்ப்பை தெரிவிப்பதாகவும் குறித்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குறைந்த வருமானத்தை பெறுவோருக்கு தனி வீடு

கொழும்பு, ஜன. 02

கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத்திட்டங்களை தொடர்ந்தும் அமுல்படுத்துமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

நாடு பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள நிலையில், திறைசேரிக்கு சுமையை ஏற்படுத்தாமல் வீடமைப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நிதியைக் கண்டுபிடிப்பதில் கவனம் செலுத்துமாறும் அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

கலைஞர்கள் மற்றும் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கான ஐந்து வீட்டுத் திட்டங்களின் கீழ் 1,996 வீட்டு அலகுகளை நிர்மாணிக்கும் பணிகள் இந்த வருட ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்படும் என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்தது.

சீன அரசின் கடன் உதவித் திட்டத்தின் கீழ் இந்த வீடுகள் கட்டப்படுகின்றன. சீன அரசாங்கம் 552 மில்லியன் யுவான் கடனுதவியை வழங்கும், அதற்கான ஒப்பந்தம் கடந்த ஆண்டு ஜனவரி 9ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறுவோருக்கு 1,888 வீடுகளும், பழம்பெரும் கலைஞர்களுக்கு 108 வீடுகளும் நிர்மாணிக்கப்படவுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பேலியகொடை, மஹரகம, மொரட்டுவை, தெமட்டகொடை ஆகிய பகுதிகளில் இந்த வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளதுடன், கலைஞர்களுக்கான வீட்டுத்திட்டம் கொட்டாவ பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட உள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்காக சீன அரசு மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிரதிநிதிகள் இணைந்து மக்கள் தொகை ஆய்வை மேற்கொண்டுள்ளனர். நகர அபிவிருத்தி அதிகார சபையினால் வீடுகளை நிர்மாணிப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

(அ)

## ஆணைக்குழு...

இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

அரசமைப்புச் சபைக்கு மூன்று சிவில் சமூகப் பிரதிநிதிகளை நியமிப்பது தொடர்பில் சபாநாயகர், பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் இணக்கப்பாட்டுக்கு வரமுடியவில்லை என்பது பிரதான பிரச்னையாகும்.

இந்த மூன்று உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக சபாநாயகர், பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருக்கு இடையில் மூன்று சந்திப்புக்கள் நடத்தப்பட்ட போதிலும், முன்மொழியப்பட்ட இரண்டு பெயர்கள் தொடர்பில் இணக்கப்பாட்டுக்கு வரமுடியவில்லை. முன்வைக்கப்பட்ட மூன்று பெயர்களில், டாக்டர் பிரதாப் ராமானுஜம் பெயரை மட்டுமே கட்சித் தலைவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

அரசமைப்பின் பிரகாரம் சபாநாயகர், பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரின் இணக்கப்பாட்டுடன் இந்த மூன்று நியமனங்களும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

அத்துடன், பிரதான எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தாத எதிர்கட்சியின் சிறிய கட்சிகளின் உடன்பாட்டின் மூலம் நியமிக்கப்பட வேண்டிய பிரதிநிதி தொடர்பில் அந்தந்த கட்சிகளின் தலைவர்களால் இணக்கப்பாடு எட்டப்படவில்லை. அந்த பதவிக்கு உதய கம்மன்பில மற்றும் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகிய இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் அந்தந்த கட்சிகளால் முன்மொழியப்பட்டபோதிலும் அவர்களில் ஒருவரை தெரிவு செய்வது தொடர்பில் கட்சித் தலைவர்களால் இணக்கப்பாடு எட்டப்படவில்லை.

இதன்படி, பத்து உறுப்பினர்களைக் கொண்ட அரசமைப்புச் சபையில் நான்கு பேர் நியமிக்கப்படாமையால், அரசமைப்புச் சபை மற்றும் சுயாதீன ஆணைக்குழுவின் நியமனங்கள் காலவரையறையின்றி முடங்கியுள்ளன என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

# குறைந்த கலண்டர், டயரி அச்சிட்ட ஆண்டாக 2023!

கொழும்பு, ஜன. 02

கடந்த கால வரலாற்றில் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான கலண்டர்கள் மற்றும் டயரிகள் அச்சிடப்பட்ட ஆண்டாக 2023 இருக்கும் என்று கலண்டர் மற்றும் டயரி அச்சகத்தினர் கூறுகின்றனர்.

முன்னைய ஆண்டுகளில், டயரிகள் மற்றும் கலண்டர்கள் வெவ்வேறான வடிவங்களில் வடிவமைக்கப்பட்டு அச்சிடப்பட்டு அதிக ஓடர் பெறப்பட்டது, தற்போது நாட்டில் காகிதத் தட்டுப்பாடு மற்றும் அச்சிடப் பயன்படுத்தப்படும் மைகளின் விலை அதிகரிப்பாலும் கலண்டர்கள், டயரிகளை அச்சிடுவதற்கான ஓடர்களை வர்த்தக நிறுவன உரிமையாளர்கள் வழங்கவில்லை. இந்த செலவு ஐந்து மடங்கு அதிகரித்துள்ளது.

மேலும் மின் கட்டணம் அதிகரிப்பால் டிஜிட்டல் தொழில்நுட்பம் மூலம் கலண்டர் அச்சடிக்க அதிக செலவாகிறது, அத்துடன் 2023 ஆம் ஆண்டுக்கான டயரிகள், கலண்டர்களை அச்சடிக்க ஓர்டர் கொடுத்த வணிக நிறுவனத்தினர் டயரிகள் மற்றும் காலண்டர்கள் குறைந்த எண்ணிக்கையில் அச்சடித்துள்ளனர்.

மேலும் மற்ற ஆண்டுகளில், நாட்டில் உள்ள பல்வேறு பெரிய வணிக நிறுவனங்கள் மற்றும் வணிகர்கள் மாதாந்தம் 12 பக்கங்களில் அச்சிடும் நாட்காட்டியை ஆறு பக்கங்களாக மட்டுப்படுத்தியுள்ளன.

பொது மற்றும் தனியார் வங்கிகள் ஒவ்வொரு ஆண்டும் தங்கள் வாடிக்கையாளர்களுக்கு இலவச கலண்டர்களை வழங்குகின்றன, மேலும் சில வங்கிகள் 2023 ஆம் ஆண்டிற்கான கலண்டரை தயாரித்து சமூக ஊடக வலைப்பின்னல்கள் மூலம் வாடிக்கையாளர்களுக்கு நாட்காட்டியை அனுப்பியுள்ளன.

இதேவேளை தற்போது அச்சடிக்கப்பட்டு விநியோகிக்கப்படும் காலண்டர்கள் மற்ற ஆண்டுகளைப் போல மிகவும் கவர்ச்சிகரமான முறையில் அச்சிடப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

## 2022இல்...

அமைந்தது என அமெரிக்கத் தூதுவர் கூறினார்.

இந்த உதவியானது அரசாங்கம், தனியார், சிவில் சமூகம் மற்றும் இலங்கை மக்களுடன் இணைந்து பணியாற்றும் தமது பங்காளித்துவத்தை எடுத்துக் காட்டுவதாக ஜூலி சங் தெரிவித்தார். (அ)

## புத்தாண்டு தின...

சென்றனர். ஆனால், அவர் செல்லும் வழியிலேயே உயிரிழந்தார்.

முற்பகை காரணமாகவே இந்தக் கொலை இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது. சம்பவம் தொடர்பாக பூர்வாங்க விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## புத்தாண்டு...

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மோதல்கள் மற்றும் வாகன விபத்துக்கள் உள்ளிட்ட பல்வேறு விபத்துக்களில் காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு தேசிய வைத்தியசாலை தெரிவித்துள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu

## கல்லுண்டாயில் வாள்வெட்டு! இளைஞர் ஒருவர் படுகாயம்!

யாழ்ப்பாணம், ஜன. 02

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்லுாண்டாய் வைரவர் ஆலயத்திற்கு அருகாமையில் நேற்றிரவு இடம்பெற்ற வாள்வெட்டில் 34 வயதுடைய நபர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

வாள்வெட்டிற்கு இலக்கானவரது வீடு வாள்வெட்டு நடந்த இடத்திற்கு அருகாமையிலேயே காணப்படுகிறது.

இந்நிலையில் அவர் வீட்டுக்கு வெளியே வந்து வீதியில் நின்றவேளை ஓட்டோ மற்றும் மோட்டார் சைக்கிளில் வந்த கும்பல் வாள்வெட்டை மேற்கொண்டு விட்டு அங்கிருந்து தப்பித்துச் சென்றுள்ளது.

இதன்போது படுகாயமடைந்த நபர் 1990 இலக்க அவசர நோயாளர் காவு வண்டி மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச்சம்பவம் குறித்து மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

## யாழ். மரியன்னை பேராலயத்தில் புதுவருட நள்ளிரவு ஆராதனைகள்!

யாழ்ப்பாணம், ஜன. 02

2023 புதுவருடப்பிறப்பை முன்னிட்டு நள்ளிரவு ஆராதனைகள், கூட்டுத்திருப்பலிகள் யாழ். மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான தேவலாயங்களில் மிகவும் சிறப்பாக இடம்பெற்றன.

அந்தவகையில் வரலாற்று சிறப்புமிக்க புனித யாழ். மரியன்னை தேவலாயத்திலும் 2023ஆம் ஆண்டுக்கான விஷேட கூட்டுத்திருப்பலியுடனான ஆராதனை நேற்று நள்ளிரவு இடம்பெற்றது.

இவ் கூட்டுத்திருப்பலியை யாழ். மறைமாவட்ட ஆயர் வணக்கத்குரிய ஜஸ்டின் ஞானப்பிரகாசம் ஆண்டகை ஒப்புக்கொடுத்தார்.

இதில் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களில் இருந்தும் வருகைதந்த கிறிஸ்தவ மக்கள் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

## புத்தாண்டு கொண்டாட்டம் 50 பேர் மருத்துவமனைகளில்!

கொழும்பு, ஜன. 02

2023 - புதுவருடத்தை பட்டாசு வெடித்து கொண்டாடியவர்கள் மற்றும் வேறு விபத்துகளால் காயமடைந்த 50 பேர் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு முதல் நண்பகல் வரையிலான காலப் பகுதியிலேயே இந்த விபத்துக்கள் பதிவாகியுள்ளன.

பட்டாசு வெடித்ததில் காயமடைந்த 4 பேரும் வீதி விபத்துக்கள் மற்றும் ஏனைய விபத்துக்களில் காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர் என்று கொழும்பு தேசிய மருத்துவமனை தெரிவித்தது. (ஐ)

## இந்தியா-காங்கேசன்துறை கப்பல் சேவை மார்ச்சில்!

கொழும்பு, ஜன. 02

இந்தியாவுக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலே பயணிகள் கப்பல் சேவையை அரசாங்கம் மார்ச் மாதம் ஆரம்பிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுக்கு வழங்கிய பணிப்புரைக்கு அமைய ஆரம்பக் கட்ட கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில் தமிழக அரசுடன் தூதரக அளவிலான பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு, சாதகமான பதிலைத் தொடர்ந்து இந்த ஆண்டு படகுச் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, காங்கேசன்துறையிலா அல்லது மன்னாரிலா குடிவரவு ஆய்வு நிலையம், சுங்க அனுமதி நிலையம் மற்றும் துறைமுக அதிகாரசபை நிலையம் என்பவற்றை அமைப்பது என்பது குறித்து ஜனாதிபதியின் செயலாளருக்கும் அரச திணைக்களங்களின் அதிகாரிகளுக்கும் இடையில் பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன. (அ)

# குறைவாக மின்சாரம் பாவிப்போருக்கு கூடுதல் பாதிப்பைத் தரப்போகும் மின் கட்டண உயர்வு!

கொழும்பு, ஜனவரி 02

**புதிதாக நடைமுறைப்படுத்தப்படவுள்ள மின்சார கட்டண திருத்தம் குறைந்த மின்சார பாவனையை கொண்ட நுகர்வோருக்கு அதிக பாதிப்பை ஏற்படுத்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த திருத்தம் நாளை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

புதிய திருத்தத்தின் கீழ், 0 முதல் 60 அலகு வரையிலான பிரிவின் கீழ் ஒரு அலகுக்கான கட்டணமும், நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களும் திருத்தப்பட்டுள்ளன.

இதன்படி, 8 ரூபாயாக இருந்த அலகுக்கான கட்டணத்தை 30 ரூபாயாகவும், நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் 120 ரூபாயில் இருந்து 400 ரூபாயாகவும் உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

புதிய திருத்தத்தில் அலகுக்கான கட்டணம் 10 ரூபாயில் இருந்து 37 ரூபாயாகவும், 31-60 அலகுகளுக்கு நிலையான கட்டணம் 240 ரூபாயில் இருந்து 550 ரூபாயாகவும் உயர்த்த பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

60 யுனிட்டுகளுக்கு மேல் உள்ள பிரிவின் கீழ் உள்ள ஒரு அலகுக்கான கட்டணம் மற்றும் நிலையான கட்டணமும் புதிய திருத்தத்தின் மூலம் அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும் 16 முதல் 60 வரை இருந்த அலகுக்கான கட்டணத்தை ரூ.42 ஆக உயர்த்த தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், நிலையான கட்டணம் ரூ.650 ஆக புதிதாக சேர்க்கப்பட்டுள்ளது.

61-90 அலகுகளுக்கு 16 ரூபாவாக இருந்த அலகுக்கான கட்டணத்தை 42 ரூபாவாகவும், 360 அலகுகளுக்கான நிலையான கட்டணத்தை 650 ரூபாவாகவும் உயர்த்த புதிய திருத்தம் முன்மொழியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

91 முதல் 120 அலகுகள் வரை, அலகு ஒன்றுக்கு ரூ.50 ஆக இருந்த கட்டணம் திருத்தியமைக்கப்படாமல், ரூ.960 ஆக இருந்த நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை ரூ.1,500 ஆக உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

121 முதல் 180 யுனிட் வரை, 75 ரூபாயாக இருந்த அலகுக்கான கட்டணம் திருத்தியமைக்கப்படாமல், 960 ஆக இருந்த நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் மட்டும் 1500 ரூபாயாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

181 அலகுகளுக்கு மேல் பயன்படுத்தும் வாடிக்கையாளர்களுக்கு அலகுக்கான கட்டணம் ரூ.75ல் இருந்து மாறாது என்றும், நிலையான கட்டணம் ரூ.1500 முதல் ரூ.2000 வரை புதிய திருத்தத்தில் முன்மொழியப்பட்டுள்ளது.

நுகர்வு நேரத்தின்படி, இரவு 10.30 மற்றும் காலை 5.30 வரை 30 ரூபாயாக இருந்த அலகுக்கான கட்டணம் 40 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. நிலையான கட்டணம் 1500 ரூபாயிருந்து 2000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

மத ஸ்தலங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களுக்கு, 0-30 அலகுகளுக்கான கட்டணம் ரூ.8ல் இருந்து ரூ.30 ஆகவும், நிலையான அலகுக்கான கட்டணம் ரூ.90ல் இருந்து ரூ.400 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

31 இல் இருந்து 90 அலகுகள் வரை அலகுக்கான கட்டணம் ரூ.15ல் இருந்து ரூ.37 ஆகவும், நிலையான கட்டணம் ரூ.120ல் இருந்து ரூ.550 ஆகவும் உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

91-120 அலகுகள் வரை அலகுக்கான ரூ.20ல் இருந்து ரூ.42 ஆகவும், நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் ரூ.120ல் இருந்து ரூ.650 ஆகவும் உயர்த்த பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

180 அலகுகளுக்கு மேல் பயன்படுத்தும் மத ஸ்தலங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களுக்கு அலகு ஒன்றுக்கு ரூ.32ல் இருந்து ரூ.50 ஆகவும், நிலையான விலை ரூ.1,500 முதல் ரூ.2,000 ஆகவும் உயர்த்த பரிந்துரைக்கப்பட்டுள்ளது. (அ)

# வீட்டு பொருட்களை விற்று போதைப்பொருள் பாவனை

## மகனை பொலிஸாரிடம் ஒப்படைத்த தாயார்!

முல்லைத்தீவு, ஜன. 02

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் போதைப் பொருளுக்கு அடிமையான மகனை, தாயாரே பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

தந்தை இல்லாத நிலையில், தாயாரே குடும்ப பாரத்தை சுமந்து, மகனை சிரமத்தின் மத்தியில் வளர்த்து வந்தார்.

கடந்த சில மாதங்களாக மகன், போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ளார்.

போதைப்பொருள் வாங்க பணமில்லாத நிலையில், வீட்டிலிருந்த பொருட்களை விற்பனை செய்தும், அடமானம் வைத்து போதைப்பொருள் வாங்கியுள்ளார்.

தாயாரின் மோதிரத்தை தருமாறு இளைஞன் வற்புறுத்த தொடங்கிய நிலையிலேயே, தாயார் பொலிஸாருக்கு அறிவித்து, இளைஞனை கையளித்துள்ளார்.

இளைஞன் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு, மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார். அவர் போதைப்பொருள் பாவிப்பது உறுதியானது. இதையடுத்து, நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டார். (அ)

# வாழ்க்கைச் செலவு உயர்வு

கொழும்பு, ஜன. 02

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் தரவுகளின்படி செப்ரெம்பர் மாத பணவீக்கம் 69.8 வீதமாக ஆக உயர்ந்துள்ளது. ஒகஸ்ட் மாதத்தில் பணவீக்கம் 64.3 வீதமாக பதி வானது.

இந்தநிலையில் ஒகஸ்ட் மாதத்தைக்காட்டிலும் செப்ரெம்பர் மாதத்தில் பணவீக்கம் 5.5 வீத அதிகரிப்பை பதிவுசெய்துள்ளது.

இதேவேளை உணவுப் பணவீக்கம் ஒகஸ்ட் மாதத்தில் 93.7 வீதமாக இருந்த நிலையில் செப்ரெம்பரில் அது 94.9 வீதமாக உயர்ந்துள்ளது.

உணவில்லாப் பொருட்களின் பணவீக்கம், 50.2 வீதத்தில் இருந்து 57.6 வீதமாக உயர்ந்துள்ளது.

மதுபானம் மற்றும் புகைப்பொருட்களின் பணவீக்கம் ஒகஸ்ட் மாதத்தில் 35.6 வீதமாக இருந்த நிலையில், செப்டெம்பர் மாதத்தில் 39.4 ஆக உயர்வடைந்துள்ளது.

ஆடை மற்றும் காலணிகளின் பணவீக்கம் 56.07 இலிருந்து 66 வீதமாக அதிகரித்துள்ளது.

நீர் மின்சாரம் மற்றும் எரிபொருள் ஆகியவற்றின் பணவீக்கம் 21.8 வீதத்திலிருந்து 31.2 வீதமாக அதிகரித்துள்ளது.

சுகாதாரம் தொடர்பிலான பணவீக்கம் 26.4 இலிருந்து 30.7 ஆக அதிகரித்துள்ளது.

போக்குவரத்து பண வீக்கம் 148.6 இலிலிருந்து 150.4 ஆக உயர்வடைந்துள்ளது. தொலைத்தொடர்புக்கான பணவீக்கம் 7.3 இலிருந்து 23.5 ஆக உயவடைந்துள்ளது.

கல்விக்கான பணவீக்கம் 24 இலிலிருந்து 27.9 ஆக உயர்வடைந்துள்ளது.

விருந்தகங்கள் தொடர்பான பணவீக்கம் 87.8 இலிருந்து 96.6 வீதமாக அதிகரித்துள்ளது.

ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள் 59.2 இலிருந்து 72.8 ஆக உயர்வடைந்துள்ளது.

வீட்டு பராமரிப்பு தொடர்பான பணவீக்கம் 56.8 இலிருந்து 65.8 ஆக அதிகரித்துள்ளது.

கலாசாரம் தொடர்பான பணவீக்கம் 44 இலிருந்து 52.4 வீதமாக அதிகரித்துள்ளது.

நாட்டில் பணவீக்க அதிகரிப்பானது மேலும் பொருட்கள் சேவைகளின் விலை அதிகரிப்பையே எடுத்து காட்டுகிறது.

அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை தற்போது மும்மடங்காக அதிகரித்துள்ள நிலையில், மேலும் விலை அதிகரித்தால் மக்களுக்கு கிடைக்கின்ற வருமானம் அதனை ஈடு செய்யாது எனவும் பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் பணவீக்கம் அதிகரித்தமையினால் டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதியும் குறைவடையும் என தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் உலக சந்தையில் எரிபொருள், எரிவாயு, பால்மா, கோதுமை மற்றும் தங்கம் ஆகியனவற்றிற்கான விலை குறைந்தாலும், இலங்கையில் அவை அதிகரிப்பதற்கான சாத்தியங்களே உள்ளன. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.01.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.